பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஆகஸ்ட் 2018



நானிலு போற்றி வாழ்பவர்

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

தோற்றம் 1972

ஆகஸ்ட் 2018


*ஆசிரியர் / வெளியிடுபவர் :*
**அமின் மொஹமெட்**
*இணையாசிரியர் :*
**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி**
*நிர்வாக ஆசிரியர் :*
**சஃபி மொஹமெட்**
*ஆசிரியர் குழு :*
**ஹிப்ஸீர் ரஹ்மான்**
**நெல்லை உலகம்மால்**
**வசந்தி ஆதித்தன்**
**கவிஞர் அ.முத்துசாமி**
**கவிஞர் ஈழபாரதி**
**கவிஞர் பாலமுனை பாறூக்**
*ஆலோசகர்கள் :*
**“பைந்தமிழசு“ பாவலர் மா. வரதராசன்**
**கவிதாயினி சக்தி ஜோதி**
**கவிதாயினி அமுதா பொற்கொடி**

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.

4, Sengeniyamman kovil street, Solainagar,
Muthialpet, Pondichery - 605 003. India.

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.
நூல் விமர்சனத்துக்கு, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.
படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com


## புதிய வெளியீடு...







**தேவைக்கு தொடர்புக்கொள்ளவும்.**

# கவிதை சொல்லவா

அவன்
இதழ்பட்ட
குவளையில்
மதுகுடித்தேன்

மதுகுடித்த
மயக்கத்தில் மடியில்
சாய்ந்தேன்

விரல்பட்ட
இடமெல்லாம்
அங்கம் மின்னி
விளையாடி
மகிழ்ந்ததடி
அவன் அன்பில்

கவி வடித்தான்
சிலைவடித்தான்
பெண்ணுக்குள்
ஒரு ஓவியமாக
என்னைப்பார்த்தான்
நெஞ்சுக்குள்

மலை உடைக்க
வந்த உளி
மிரண்டதடி

அது மௌனத்தால்
மலையிடம்
கொஞ்சுதடி

உதடுப்பட்ட
இடமெல்லாம்
காயங்கள் அவன்
உள்ளம் பட்ட
காதலோ இன்பங்கள்



காகிதமும்
தூரிகையும் அவனிடம்
அந்த கவிதை
நாயகனோ என்னிடம்

இதயம்தந்தான்
நினைவு தந்தான்
உறவுகளாக
என் உயிருக்குள்
நான்வைத்தேன்
சுவாசங்களாக

கவிசொல்லவா
காதல் சொல்லவா
என்றான்டி

நானோ
காதல்சொல்லு
காதல் சொல்லு
காலங்கள் உள்ளவரை

அதை
கவிஎழுதி
கவி எழுதி
புகழ்பாடு தமிழழே

கவிஞர் பட்டுக்கோட்டை காதர்



அமைதி நிறைந்த காடு
தனிமையின் சிறைவாசமாய்...!!!
மரங்கள்...!

ச. இராஜ்குமார்

# ஹைக்கூ

அவசரத்தில் விற்றவனின்
முகம் வந்து வந்து போகின்றது
வறுமை

அடுப்பங்கரையில்
கறுகும்
மல்லிகை பூ

உடைந்தும்
ஒட்டிக் கொள்கிறது
காந்த துண்டுகள்

தாகம் தீராமல்
ஓடிக்கொண்டு இருக்கின்றன
சாதி ரயில்

சட்டையை
துவைக்க மனமில்லை
உன் வாசம்

எல்லாம்
வரம்தான்
காதலில்

நிலவு விழித்திருக்கு
காவளுக்கு
கூர்க்கா

மழை வரும் அறிகுறி
வானில் பறக்கிறது
தும்பிகள்

சுபி.முருகன், தர்மபுரி

# எஞ்சியது எது

விண்ணை நம்பியே
மண்ணை உழுதோமே!
உழவு செய்து
பயிர்கள் வளர்த்தோமே!

காடுகள் அழிந்து
கட்டிடங்கள் உயர்ந்ததே!
வர்ணனின் கோபமும்
எம்மைத் தாக்கியதே!

விளைச்சல் குறைவே
விலைவாசியின் உயர்வே!
நம்வாழ்வின் தவிப்பே
கண்ணீரில் மிதப்பே!

கந்துவட்டி – கழுத்தை
நெரித்துக் கொல்லுதே!
கேட்பார்கள் இல்லாது
போனதெங்கள் நிலைமையே!

ஆடுமாடுகள் உணவின்றி
உயிரை விட்டதே!
வேளாண்மையின்றி வயிறும்
காய்ந்து போனதே!

கரங்களை நீட்டியே
அரசை நாடியே!
உதவிகள் கேட்டோம்
பலனின்றிப் போனதே!

அழிந்த விவசாயத்தினால்
அபிவிருத்திக் காணுதே!
எட்டுவழிச்சாலை – எமனாக
வந்தெம்மை வதைக்கின்றதே!

இருந்த நிலத்தையும்
அரசாங்கம் கொள்ளையடித்ததே!
அடித்த கொள்ளையில்
அவன்குடும்பம் வாழ்கிறதே!

உலகிற்கு நாங்கள்
உணவளித்த இனமடா!
எஞ்சியது நமக்கு
துண்டுத் துணியடா!

இறைவா நீயும்
மண்ணிறங்கி வந்திடு!
உழவனாய் ஒருநாள்
வாழ்ந்து பார்த்திடு!

கல்லான நீயும்
கரைந்து விடுவாய்!
கண்ணீரில் மூழ்கி
இறந்தே போவாய்!

– பாரதி கண்ணம்மா



# தொலைந்த மொபைலைக் கண்டுபிடிக்க...

சோலை மலரன்

தொலைந்த மொபைலை ஒரே நிமிடத்தில் நாமே கண்டுபிடிக்கலாம்... அனைத்தையும் லாக் கூட செய்யலாம்...

செல்போன் தவறவிட்டால் பதறாமல் இருந்த இடத்திலிருந்தே கண்டுபிடித்து விடலாம். அது மட்டும் இல்லாமல், நம்முடைய தனி மனித ரகசியத்தை பற்றி கவலை கொண்டால், அல்லது மிக முக்கிய செய்திகள் மற்றும் பைல்ஸ் யாரேனும் திருட முடியும் என்று பயந்தாலோ இனி அந்த கவலையை விட்டு விடுங்கள்...

அந்த போனில் உள்ள முக்கிய தகவல்களை லாக் செய்ய முடியும். தவறவிட்ட, திருடப்பட்ட செல்போனில் உள்ள முக்கிய தகவல்களை அழிக்க முடியும். ஆச்சரியமாக இருக்கிறதா. இது உண்மை. இந்த அத்தனை வசதிகளையும் எப்படி பயன்படுத்துவது என்று பார்ப்போம்.

find my device

find my device மூலம் இதை எளிதான செய்ய முடியும்.

முதலில் கூகுள் சர்ச்சில் android.com/find என டைப் செய்யுங்கள்..

பிறகு உங்கள் கூகுள் அக்கவுண்டை log in செய்ய வேண்டும். உங்களின் email and password கொடுத்த பின்பு லாக் இன் ஆகும்.

அப்போது ஸ்க்ரீனின் இடது புறம் நாம் தவற விட்ட செல்போன் மாடல் எண் மற்றும் அதற்கு கீழே play sound, lock, erase என்ற 3 தகவல்கள் இருக்கும்.

ஸ்கிரீன் வலது புறம் தற்போது அந்த செல்போன் எந்த இடத்தில் உபயோகத்தில் உள்ளது என்பது map மூலமாக தெரியவரும்.

play sound கிளிக் செல்தால் செல்போன் 5 நிமிடம் ஒலிக்கும்.

lock ஆப்சனை கிளிக் செல்தால் செல்போன் லாக் ஆகி விடும்.

erase ஆப்சனை கிளிக் செல்தால் செல்போனில் உள்ள தகவல் அனைத்தும் அழிந்து விடும்.

இந்த அற்புதமான செய்தியை நாம் ஒவ்வொரு வரும் தெரிந்து வைத்துகொண்டால், என்றோ ஒரு நாள் நமக்கே பயன்படும். அதுமட்டும் இல்லாமல் மிக எளிதில் எந்த இடத்தில் அந்த மொபைல் இயங்கி கொண்டிருகிறது என்பதையும் தெரிந்துகொள்ள முடியும்



# ஒன்றுமில்லை!

## கோவை.சரவண பிரகாஷ்

அவள் அன்று அவ்வளவு அழகாக இல்லை... அவன் கண்கள் சொன்னது. ஆனாலும் உள்ளம் அவளை மட்டுமே பார்த்துக் கொண்டு இருந்தது...

ஆண்டொன்று கழித்து அவளை காணப் போகும் பரவசம், பதற்றம், மகிழ்ச்சி இந்த மொத்த உணர்வுகளுக்கு அவனிடம் அப்போது பெயர் இல்லை.. நேசத்திற்குரியவர்கள் நெடுநாட்கள் பின் பார்த்துக் கொள்ளும் போது முதலில் பேசுவது கண்களாகத்தான் இருக்கமுடியும். நாளும் இதயங்கள் பேசுகிற போது இதழ்களின் வார்த்தைகள் ஒன்றும் சுவை இல்லையே...

இலக்கிய கூட்டம்.அவளுக்கருகில் அவன் அமர்ந்திருப்பது இது முதல் முறை அல்ல. ஆனாலும் தேர்வு முடிவுக்கு காத்திருக்கும் மாணவன் போல அவனுக்குள் எதோ ஒரு உணர்வு. இதயத் துடிப்பின் வேகத்தை கட்டுப்படுத்தும் வேகக்கட்டுப்பாடு கருவி அவனிடம் இல்லை. சில உணர்வுகளை வார்த்தைக்குள் சிறை படுத்த முடியாது.

பேசினாள்... ஈராறு திங்களுக்கு பின் செவ்வாய் திறந்து பேசினாள். ஒன்றோ இரண்டோ வார்த்தைகள் பேசினாள். பேசியது அவள் இதழ்கள் பதில் உரைத்தது அவன் கண்கள்.வார்த்தைகளை முடமாக்கி கண்கள் கபட நாடகமாடியது. ஆனால், அவளுக்கு தான் அதை யாரும் மொழி பெயர்க்கவில்லை.

கூட்டம் தொடங்கியது! அமுதினும் இனிய தமிழ், இசையினும் எளிய கவிதை, நெஞ்சில் மாமழையாய் செய்யுள்கள். அவள் அவ்வப்போது ரசித்தாள், அவனும் ரசித்தான், அவளை ரசித்தான். முதன் முறையாக கவிதைக்கு அவன் செவி மட்டுமே சொந்தமானது உள்ளம் அதில் இல்லை. அப்போது அங்கு இருந்தாலும் எங்கோ ஒரு பாலைவன காட்டில் கவிதையும் இசையும் அவனை வாசித்து கொண்டு இருந்ததாய் உணர்ந்தான்.

அவ்வப்போது அவள் சபரிசம் பட்ட போது அவனுக்கு நிகழுலக நினைப்பு வந்தது. எல்லோர் கண்களும் முன்னோக்கி இருந்தது அவனுடைய எண்ணங்கள் மட்டும் எதிர்நோக்கிருந்தது.

அவ்வப்போது அவள் அவனை பார்த்தாள், சந்தேகங்கள் கேட்டாள், திக்குத் தெரியாதவனாய் வார்த்தைகளில் சிக்கெடுத்தான். அதிகம் பேசவில்லை அவன். சட்டைசெய்யவில்லை அவள்.

அவளும் கவிதை வாசித்தால். எல்லோரும் ஒரு கவிதைக்கு கைதட்டினார்கள். அவன் மட்டும் இரண்டு கவிதைக்கு தட்டினான்.

தமிழர் வாழ்வு கேட்டு கவலை கொண்டால் அவள், அவள் கால்கள் வலிக்குதா என்று கவலைகொண்டான் அவன். அவள் பிஞ்சு விரல்களை சேர்த்துக் கொண்டு உள்ளதை சொல்ல வேண்டும் என்று தோன்றியது அவனுக்கு.

அவளுக்கு தன் இதயத்தில் வரிகளை பிரதி எடுத்து அனுப்ப நினைக்கிறான்...

மகிழ்ச்சி நிறைந்த அவையில் என் இதயம் ஏங்கி ஏங்கி அழுகின்ற ஓசை உனக்கு கேட்கவில்லையா? என்று கதற நினைக்கிறான்.

என் அன்பு உனக்காக கட்டுப்பட்டுக்கிடப்பது உனக்கு ஏன் புரியவில்லை என குமுற நினைக்கிறான்

மணி மனியாய் பேசுவாயே,குழந்தை போல் சிரிப்பாயே, சிறு பிள்ளைத்தனம் செய்வாயே,என் உள்ளத்து உணர்வுகளை உவந்து கூற சொல்ல வழி இல்லாமல் வலி தரும் உன் இதம் செரித்த வார்த்தைகளை ஏன் நீ எண்ணிப்பார்க்கவில்லை....

அழுகிறான். உணர்வுகளினால் அழுகிறான். உணர்வுகளின் அழுகை எவருக்கும் தெரிந்திட வாய்ப்பில்லையே!

இதயம் மெல்ல தவழ்ந்து மேல வருகிறது. அதனை வெளியே கொட்டவிடாமால் எதார்த்தம் இறுக்கி பிடித்துவிட்டது.

சில உணர்வுகளோடு சேர்த்து உறவுகளுக்கும் பெயர் இல்லை. சில வார்த்தைகள் சொல்லப்படாமல் இருப்பது தான் அழகு.பூட்டி வைத்த கதவுகளின் சாவிகளை காலம் எங்கோ தொலைத்து விடுகிறது.

கூட்டத்தோடு சேர்ந்து, அவன் உணர்வு குவியல்களை கலைகிறது. கடைசி விடை சொல்லி அவளுக்கு முன் அவன் பாதங்கள் பத்தடி சென்றிட அரை மணி நேரம் முன்பு பார்த்த யாதொன்றும் அறியாத அவன் நண்பன் வந்து கேட்டான் ..,

என்ன ஆனது?

விழியோரம் கசிக்கின்ற துளிகளை துடைத்துக் கொண்டு அந்த கவிஞன் சொன்னான்...

“ஒன்றுமில்லை!”

# வாசலில் ஓர் வெண்ணிலா

வாசலில் ஓர் வெண்ணிலா
பாச ஊஞ்சலாய் பெண் நிலா
நேசப் பார்வை என் நெஞ்சிலா
கேசம் பறப்பது ஓர் கொடியிலா


நெஞ்சை அள்ளும் நினைவிலா
தஞ்சம் தந்திடும் பேரன்பிலா
பஞ்சம் ஏதுமிலா பண்பிலா
கொஞ்சும் இன்பக் கனவிலா


நிலா ஒளியில் மயங்குகிறேன்
உலா வர உளமார விரும்புகிறேன்
கலா ரசனையில் காத்திருக்கிறேன்
பலாவின் இனிப்பாய் தித்திக்கிறதே

தேடிப் போன தேவதையோ
நாடிப் போக நான் நாயகனோ
கூடிப் பேசி கும்மாளமிடலாமோ
சூடிய பூவாய் மணக்கிறாளே

பார்வையில் இதயம் நனைகிறதே
கோர்வையாய் குளிர்விக்கிறாளே
போர்வையாய் நானாகலாமோ
ஆர்த்தெழுந்து உச்சி முகரலாமோ.

- ராம்க்ருஷ்






வாழ்வின் எல்லாப்பக்கங்களிலும் கவிதைகளால் நிறைந்துள்ளது. ஆனாலும், அது எல்லோரின் கண்களுக்கும் புலப்படுவதில்லை. நாம் பார்க்கின்ற பார்வைகளும் நம் எண்ணங்களிலும் அது மாறுபடுகின்றது. நம் கண்முன் புலப்படாத ஒன்றைக்கூட அகக்கண்களினால்கூட கவிதையாக்கிட முடியும்.

அவ்வாறாக அந்த வானம் அதன் முழுவதும் மின்னுகின்ற நட்சத்திரங்கள், பூமி முழுவதும் பரவிக்கிடக்கின்ற கடல், மரங்கள், சருகுகள் என்பனவற்றையும், காதல், காமம், பிரிவு அகம்சார்ந்தும், புறம்சார்ந்தும் பேசுகின்ற கவிதைகளாக இத்தொகுப்பில் காணமுடிகின்றது.

அகம் சார்ந்து பேசுகின்ற கவிதைகளை விட புறம் சார்ந்து பேசுகின்றபோது சமூக விழிப்புணர்ச்சியை, சமூக மாற்றத்தினை ஏற்படுத்திவிட முடியும்.

காலம் காலமாக இத்தமிழ் சமூகம் சாதி எனும் பெரும் தீயை இன்னும் இன்னுமாக எரித்துக்கொண்டுதான் இருக்கின்றது. இதில் பலநூறு குடிசைகள் எரிந்துக் கொண்டுதான் இருக்கின்றது. கால நீட்சியில் அதன் வீரியம் குறைந்ததாகத் தெரியலாம். ஆனால், அது உண்மையல்ல என்கிறார் கவிஞர் சசிகுமார்.

"தப்பித்துச் செல்ல வழியில்லா
பாசப் பிணைப்புகளில்
இன்னுமெரிகிறது
பற்ற வைத்த சாதிகளின் வன்மம்
வெவ்வேறு வடிவங்களில்."

சாதியின் வடிவம் மாறி இருக்கிறதே தவிர, அதன் வீரியம் இன்னும் குறையவே இல்லை. இவ்வாறாக சாதீய பிற்போக்குத் தனத்திற்கு எதிரான பலநூறு கவிதைகள் வரவேண்டும்.

எளிமையான வரிகளால் எதார்த்தத்தை கவிதையாக்குகின்ற வல்லமை கவிஞருக்கு வாய்த்து இருக்கின்றது.

"தனக்கான நிழல்
தன்னைத் தொடர்கிறது
ஏண்டாமென் நிர்பந்தித்தால்கூட"

சமகால நிகழ்வுகளை, மிகச்சரியான நேரத்தில் கவிதையாக்குவது கவிஞனின் கடமை. புரட்சியின் வித்தாய் சமூக அக்கறையோடு பலகவிதைகளை இத்தொகுப்பு முழுவதிலும் காணக்கிடைக்கிறது. அதிலும் நெடுஞ்சாலைகளுக்காக அடியோடு அழிக்கப் பட்டுவரும் இயற்கை வளங்கள் குறித்த இந்த கவிதை சமூக மாற்றத்திற்கான ஒரு மரத்தின் விதை.

"தடயமற்று
அழிக்கப்பட்ட
பலநூறு மரங்களின்
பிணங்களின் மீது
நீண்டு படுத்திருக்கும்
இந்த நெடுஞ்சாலையின்
கதையை." பக் 84

**பழமொன்ரியு**


*ஐந்தில் வளையாதது*
*ஐம்பதில் வளைந்தது*
*முறுக்கு மீசை*

**- மூர்த்தி**

மனிதனின் இறப்பு எவ்வளவு இழப்பாக, கவலைக்குரியதாக உள்ளதோ, அதேபோல ஒரு மரத்தின் இழப்பும், இழப்பாகப் பார்க்கின்ற மனோநிலை எல்லோருக்கும் வர வேண்டும்.

மரங்களின் குகைகளில் ஆதிமனிதன் வாழத் தொடங்கினான். அவற்றின் இலை களை ஆடையாக உடுத்தினான். அதன் காற்றை சுவாசித்தான். அவற்றின் கனிகளை ருசித்தான். விறகுகளை எரித்து உணவை புசித்தான்.

இப்போது மரமே வேண்டாமென வெட்டிச் சாய்க்கின்றான். ஏவாள் தொடங்கி இன்றுவரையுள்ள இந்த வாழ்வியல் இடைவெளி என்பது நமக்கு வெகு தூரமாகிவிட்டது. நவீனம் என்ற ஒற்றை வார்த்தைகளுக்குள் உலகம் சுருங்கிவிட்டதின் விளைவு இது. என்றாலும், எதிர்கால சந்ததிப்பிள்ளைகளுக்கு நாம் எதை கொடுத்துவிட்டுப் போகப்போகின்றோம் என்ற சமூகம் சார்ந்து எழுப்புகின்ற கவிஞரின் இந்தக் கோபம் கவிதைகலில் காண்கிறோம்.




"ஏவாள் ருசித்த கனியில்
வெட்கம் துவங்கி
மறைக்கப்பட்ட அங்கங்களில்
ரசனித் தூவி
வெட்கம் மறைக்க வெட்டிய
என் கானக மரங்களில்
உன் இனம் செழித்துவிட்டது
என் இனம் செத்துவிட்டதெனக் கதறி
காற்றில் பறந்து மறைந்தது
உயிர் வற்றிய சருகொன்று'' பக் 90

சொல் புதிது, பொருள் புதிது, வளம் புதிது சோதிமிக்க நவ கவிதை. எந்நாளும் அழியாத மாகவிதை என்பார் பாரதி.

பாரதியின் கவிதைக்கு இலக்கணமாக புதிய, புதிய வார்த்தைகளுடன், நல்ல தொகுப்பைத் தந்திருக்கிறார் கவிஞர் கோவை சசிகுமார். வாழ்த்துடன் வரவேற்போம்.

மண் பயனுற வேண்டும்.

**- ஈழபாரதி**

சிறகசைப்பில் மிளிரும் வெயில்
கவிஞர் கோவை சசிகுமார்

பக்கங்கள் : 96
விலை : 70
வெளியீடு : பொள்ளாச்சி இலக்கிய வட்டம்

# பொன்னுமணி

அந்த நாட்களில் - உன்
மகள் படிப்பதற்கு
பாடசாலை
வந்த நாட்களை விட
நீ வருகை தந்த நாட்களே
அதிகம்..அவளின்
வரவின்மைக்கான
காரணமும் - உன்
வறுமையின் பல்லவியும் பாட!

உன் மகளின்
எண்ணெய் காணாத
பரட்டை தலையும்...
அழுக்கோடு கசங்கிய
மஞ்சள் நிற வெள்ளை ஆடையும் -
பாதணி அணியா
வெற்றுக் காலும் - தரிசனம்
கிட்டும் நேரங்களில் எல்லாம்
ஊற்றெடுக்கும் உன்
விழிகளும் - அதை அடிக்கடி
துடைக்கும் உன்
அண்டைகள் நிறைந்த
சேலையும்.
வறுமை வதைத்த உன்
வதனமும்-
இன்னும் என் இதயச் சுவர்களில்
வடுக்களாய் வலிக்கிறது!

மானுடம் மரணித்த
இந்த ஜெகத்தினில்
உன்னை அறுவடை செய்ய
ஆயிரம் கரங்கள் துடித்தன!
வறுமையின் கண்ணீரை
துடைக்க ஒரு விரலேனும்
முன்வரவில்லையே!
அப்போதும் என் - ஆசிரிய ஊதியம்
என் வாழ்வாதாரத்திற்கே
துண்டு விழச்செய்தது
இப்போது போலவே!

வறுமையுடன் வாழ்ந்து
மடிந்து - நீ
மரண மடியில்
தஞ்சம் புகுந்து
தசாப்தங்களும்
கடந்து விட்டது!

உன்
பேரப்பிள்ளையும்
என்னிடம் அட்சரம்
பயில வருகிறாள் -
உன் மகளைப் போலவே!
பின்னால் உன்
மகளும் வருகிறாள்
உன்னைப் போலவே!
ஊற்றெடுக்கும் விழிகளுடன்!
வறுமையின் வாட்டங்களுடன்!

ஏன் பொன்னுமணி
நீங்கள் மட்டும் -
வாழையடிவாழையாகவே
வறுமையை
வரமாய் பெற்று
வந்தவர்களா?

உலகம் உங்களை
கண்டுக்கொள்ள வில்லையா?
அல்லது -
காணாமலே
ஒழிந்து
வாழ்கின்றீர்களா?
இனியும் உங்கள்
வறுமைக்கு மேல்
நாற்காலி இட்டு அமர்ந்து
நாதமிசைக்க -
நான் !
தயாரில்லை !

**குருவையூர் பாத்திமா ஹமீட்**
**குருத்தலாவை. ஸ்ரீலங்கா.**



# கற்றல் குறைபாடும் பெற்றோரும்

நம் குழந்தைகள் நன்றாகப் படிக்க வேண்டும், நல்ல மதிப்பெண்களைப் பெற வேண்டும் என்பது ஒவ்வொரு பெற்றோரின் விருப்பமாக இருக்கிறது. ஆனால் எல்லாக் குழந்தைகளும் நல்ல மதிப்பெண்கள் எடுக்க முடிவதில்லை. மேலும் நம் குழந்தைகள் நல்ல மதிப்பெண் வாங்காவிட்டால், பிற குழந்தைகளோடு ஒப்பீடு செய்கிறோம். அதனால் நம் குழந்தைகள் மிகுந்த மன உளச்சலுக்கு ஆளாகின்றனர். அதைவிடுத்து நாம் நம் குழந்தைக்கு செய்ய வேண்டுவது என்ன என்பதை ஒரு வாழ்வியல் நிகழ்வு மூலம் அறியலாம்.

கற்றல் குறைபாடுள்ள குழந்தையும் சாதனை யாளராக ஆகமுடியும் என்பது இதோ:

ஒரு வகுப்பறையில் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார் ஆசிரியர். குழந்தைகள் அனைவரும் ஒன்று சேர்ந்து பாடல் பாட, அவனோ ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறான். அனைவரும் ஓவியத்துக்கு வண்ணம் தீட்ட, அந்தச் சிறுவன் மற்றவர்களை முழங்கையால் இடித்தபடியும், சிரித்துக்கொண்டும் இருக்கிறான். உடனே அந்தச் சிறுவனின் அம்மாவுக்கு, 'உங்கள் மகன் வகுப்பில் கவனம் செலுத்துவதில்லை' என்று குறிப்பெழுதி அனுப்புகிறார் வகுப்பு ஆசிரியர்.

அவனுடைய அம்மா நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர். தன் மகனைப் போல ஆயிரம் குழந்தைகளைப் பார்த்தவர் என்பதால், குழந்தைகள் என்றால் அப்படித்தான் இருப்பார்கள் என்று நினைத்து அமைதியாகிவிட்டார்.

ஆனால் அந்தச் சிறுவனைக் குறித்த புகார்கள் மட்டும் அடுத்தடுத்த ஆண்டுகளிலும் தொடர்ந்தபடி இருந்தன. ஒரு கட்டத்தில் வயதுக்கு ஏற்ற மனவளர்ச்சி இல்லாததையும் உணர்ந்தார் அந்தத் தாய். உடனே தங்கள் குடும்ப மருத்துவரிடம் மகனை அழைத்துச் சென்றார். அவன் ADHD (Attention Deficit Hyperactivity Disorder) என்று சொல்லப்படும் கற்றல் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.

ஒன்பது வயதில் கவனச் சிதறல் மற்றும் கற்றல் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட அந்தச் சிறுவன், இன்று ஒலிம்பிக் போட்டிகளின் தங்க மகன்! நீச்சல் போட்டிகளில் 23 தங்கப் பதக்கங்களைக் குவித்து, ஒலிம்பிக்கில் தனிநபர் போட்டிகளில் அதிக தங்கம் வென்றவர். நீச்சல் போட்டிகளில் புதிய சாதனைகளை நிகழ்த்திவரும் மைக்கேல் ஃபெல்ப்ஸ்தான் அந்தச் சிறுவன்!...

கற்றல் குறைபாடு என்பது வளர்ச்சி சார்ந்தது என்பதால் ஒவ்வொரு செயலிலும் அதன் தாக்கம் இருக்கும். ‘இவனால் எதிலுமே கவனத்தைச் செலுத்த முடியாது’ என்று வகுப்பு ஆசிரியரால் சொல்லப்பட்ட ஃபெல்ப்ஸ், ஐந்து நிமிடம் பங்கேற்கப் போகும் நீச்சல் போட்டிகளுக்காக ஓரிடத்தில் தொடர்ந்து நான்கு மணி நேரம் உட்கார்ந்தார். அதிகாலையில் எழுந்து வீட்டுப் பாடங்களை எழுதினார். இவற்றைச் சாத்தியப்படுத்தியது அவரது மனஉறுதி.

கற்றல் குறைபாடு கொண்ட குழந்தைகளின் மற்றொரு சிக்கல் நேர மேலாண்மை. எதை எப்போது செய்துமுடிக்க வேண்டும் என்ற எந்தத் திட்டமிடலும் அவர்களிடம் இருக்காது. ஆனால் இதையும் தன் அக்காக்களின் உதவியோடு கடந்துவந்தார் ஃபெல்ப்ஸ். வீட்டில் அனைவரும் ஒவ்வொரு வேலையையும் குறிப்பிட்ட நேரத்துக்குள் செய்து முடிப்பது என்று திட்டமிட்டார்கள். அதன்படி ஃபெல்ப்ஸ் தன் வேலைகளைச் செய்து முடித்தார்.

தன் மகனின் மூளைக்குள் எப்போதும் ஒரு கடிகாரம் ஓடிக்கொண்டிருக்கும் என்று சொல்கிறார் தெபி. “நீச்சல் போட்டியில் குறிப்பிட்ட தூரத்தை இத்தனை விநாடிகளுக்குள் கடந்துவிட வேண்டும் என்று என் மகன் திட்டமிடுவான். அலாரம் எதுவும் தேவைப்படாமல் அவன் குறிப்பிட்ட நேரத்துக்குள் இலக்கை அடைந்துவிடுவான்”என்று பெருமிதத்துடன் குறிப்பிடுகிறார் அவர்.

காலை, மாலை என்று தொடர்ந்து நீச்சல் பயிற்சியில் ஈடுபட்டார் ஃபெல்ப்ஸ். பதினோரு வயது சிறுவனின் அபார திறமையையும் ஈடுபாட்டையும் பார்த்து, ‘2008ம் ஆண்டு ஒலிம்பிக்கில் இவன் உலக சாதனை படைப்பான்’ என்று நம்பினார் அவருடைய பயிற்சியாளர். ஆனால் அவரது நம்பிக்கையை அதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பே நிறைவேற்றினார் மைக்கேல் ஃபெல்ப்ஸ். 16வது வயதில் முதல் உலக சாதனையை நிகழ்த்தியவர், 19வது வயதில் 2004ம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் போட்டியில் ஆறு தங்கம் உட்பட எட்டுப் பதக்கங்களை வென்றார். அதற்குப் பிறகு மைக்கேல் ஃபெல்ப்ஸ்ஸுக்கு ஏறுமுகம்தான்!

எந்த மாணவனால் எதிலும் கவனம் குவிக்க முடியாது என்று முத்திரை குத்தப்பட்டதோ அதே மாணவன்தான், அந்த முத்திரையைத் தங்கப் பதக்கங்களால் மாற்றிக் காட்டினார். மூளைச் செயல்பாடுகளில் மந்தம் என்று குறிப்பு எழுதப்பட்ட சிறுவன்தான், தான் பங்கேற்ற நீச்சல் போட்டிகளின் வீடியோவைப் பார்த்து, தவறுகளைச் சரிசெய்யும் நுட்பத்தையும் அறிந்தார். பலரும் கிஞ்பிஞ் என்பதை குறைபாடு என்னும் கோணத்தில் பார்த்தார்கள். ஆனால் மைக்கேல் ஃபெல்ப்ஸின் பார்வையும் கோணமும் வேறாக இருந்தன. அந்தச் சிந்தனைதான் முப்பத்தியோரு வயதில் ஒலிம்பிக் வரலாற்றில் அவருக்குத் தனி இடத்தை ஏற்படுத்தித் தந்திருக்கிறது!

“உங்கள் புத்திதான் உங்களிடம் இருக்கும் மாமருந்து. அந்த மருந்து மூலம் நீங்கள் எதை வேண்டுமானாலும் சாதிக்கலாம்“ என்று பின்னாளில் ஒரு பேட்டியில் குறிப்பிட்டார் ஃபெல்ப்ஸ்.

இதிலிருந்து நாமும் நம் குழந்தைகளும் பெற்றுக் கொள்ளும்பாடம்எதுவெனில், ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்திறன், தனித் தன்மை உண்டு என்பதை முதலில் நாம் உணர வேண்டும். பின்னர் நம் குழந்தைகளின் கற்றல் திறன், கற்றல் குறைபாடு ஆகியவற்றைக் கண்டுணர்ந்து அதற்கேற்றார்போல் அவர்களை வழி நடத்த வேண்டும். அதைவிடுத்து குழந்தைகளின் குறைகளையே சொல்லிச் சொல்லி வளர்த்தோமானால், வளரும் இளைய சமூகம் குறையுடைய சமூகமாக மாறும் என்பதில் ஐயமில்லை.

**— பெண்ணியம் செல்வக்குமாரி**

# ஒரு பெண்ணைக் காதலிப்பதென்றால்...

கு.அ.தமிழ்மொழி



ஒரு பெண்ணைக் காதலிப்பதென்றால்

எல்லா நேரங்களிலும் அவளே
விட்டுக்கொடுக்க வேண்டும்
என நினைக்காமல் இருப்பது

அவளுக்கும் தனக்கும்
முரண்பாடுகள் இருக்கும்போதும்
நேசிப்பது

அவளுக்காக சிலவற்றை இழப்பதில்
தவறில்லை என உணர்வது

அன்பைக் காட்டுவதாலேயே
அவள் உனக்கு அடிமை இல்லை
எனத் தெளிவது

அவள் எது செய்தால்
அவனுக்குப் பிடிக்காதோ
அதனை அவனும் செய்யாமல் தவிர்ப்பது

அவளின் காதலையே
அவளின் பலவீனமாக மாற்றுவது
தவறு என அறிவது

அவளின் கடந்தகால
காயங்களின் தடயங்களைத்
தேடாமல் இருப்பது

அவனின் பேரன்பு
அவளுக்கு மட்டும் சொந்தமானது
என அறிந்து கொள்வது

கனவும் , ஆசைகளும்
இனி ஒன்றாகப்
பயணிப்பதை உணர்வது

எது நிகழ்ந்தபோதும்
மாறாத அன்பு கொண்டு
அவளை விரும்புவது

இப்படியாகச் சொல்கிறேன்

ஒரு பெண்ணைக் காதலிப்பதென்றால்
உன்னை நீயே காதலிப்பது..

# மூழ்கிப் போன உண்மைகள்

நம் உலகின் தொல்குடி தமிழனின் வரலாற்றை அறிந்து கொள்ள, ஓராயிரம் ஈராயிரம் வருடங்கள் அல்ல. சுமார் இருபதாயிரம் வருடங்களுக்கு முன்னர் போகவேண்டியிருக்கிறது என்று சொன்னால் உங்களுக்கு வியப்பாக இருக்கிறதா?

நாவலந்தீவு பற்றிப் படித்ததாக நினைவு இருக்கிறதா? இங்கு தான் உலகின் முதல் மனிதன் பிறந்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள். நம் மூதாதையர் வாழ்ந்தனர் என்பதன் அடையாளங்கள் நிறையவே உண்டு. இங்குதான் நாம் பேசும் தேனினும் இனிய மொழி தமிழ் பிறந்திருக்கிறது.

இங்குதான் இன்னும் பல வரலாற்று அதிசயங்கள் நிகழ்ந்துள்ளன. ஆம் இன்று கடலுக்கடியில் அமைதியாக உறங்கிக்கொண்டிருக்கும் குமரிக் கண்டம்தான் நாவந்தீவு. இத்தீவு, ஒரு காலத்தில் பிரம்மாண்டமாக இயங்கிக்கொண்டிருந்த ஒரு தமிழ் கண்டத்திட்டாகும்.

இன்று தனித்தனி நாடுகளாக உள்ள ஆஸ்திரேலியா, தென் ஆப்ரிக்கா இலங்கை, சிறிய சிறிய தீவுகளை இணைத்தவாறு இருந்த ஒரு பிரம்மாண்டமான கண்டம்தான் தான் "குமரிக்கண்டம். இக்கண்டத்தில்தான் ஏழுதெங்க நாடு, ஏழுமதுரை நாடு, ஏழுமுன்பலை நாடு, ஏழுபின்பலைநாடு, ஏழுகுன்ற நாடு, ஏழுகுணக்கரை நாடு, ஏழுகுரும்பனை நாடு என இங்கு நாற்பது ஒன்பது நாடுகள் இருந்திருக்கின்றன. பஃறுளி, குமரி என்ற இரண்டு பேராறுகள் ஓடியுள்ளன. குமரிக்கொடு, மணிமலை என இரண்டு மலைகள் இருந்துள்ளன.

தென்மதுரை, கபாடபுரம், முத்தூர் என்ற மூன்று பெரு நகரங்கள் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கின்றன. உலகின் தொன்மையான நாகரீகம் என்று அழைக்கப்படும் சுமேரியன் நாகரீகம் வெறும் நான்காயிரம் வருடங்கள் முந்தையது தான். நக்கீரர் "இறையனார் அகப்பொருள்" என்ற நூலில் மூன்று தமிழ்ச் சங்கங்கள் 9990 வருடங்கள் தொடர்ந்து நடைபெற்றதாக கூறியுள்ளார்.

தமிழின் முதல் சங்கம் இந்த கடலடியில் உள்ள "தென் மதுரையில்" கி.மு 4440இல் 4449 புலவர்களுடன், சிவன், முருகர், அகஸ்தியருடன் 39 மன்னர்களும் இணைந்து, "பரிபாடல், முதுநாரை, முதுகு ருக்கு, கலரியவிரை, பேரதிகாரம்" ஆகிய நூல்களை இயற்றப்பட்டது. இதில் அனைத்துமே அழிந்து விட்டது. இரண்டாம் தமிழ்ச் சங்கம் "கபாடபுரம்" நகரத்தில் கி.மு 3700இல் 3700 புலவர்களுடன் 'அகத்தியம், தொல்காப்பியம், பூதபுராணம், மாபுராணம்' ஆகிய நூல்களை இயற்றப்பட்டது .

இதில் "தொல்காப்பியம்" மட்டுமே நமக்கு கிடைத்துள்ளது. மூன்றாம் தமிழ்ச் சங்கம் இன்றைய "மதுரையில்" கி.மு 1850 இல் 449 புலவர்கள்களுடன் "அகநானூறு, புறநானூறு, நாலடியார், திருக்குறள்'' ஆகிய நூல்கள் இயற்றப்பட்டது. இவ்வளவு பழமையான தமிழனின் வரலாற்றைப் பெருமையுடன் உலகிற்கு தெரியப்படுத்த வேண்டியது ஒவ்வொரு தமிழனின் கடமையன்றோ!

இன்னமும் கூட கீழடி போன்ற அகழ்வாய்வுகளின் உண்மை வரலாறு நமக்குத் தடங்கலின்றி கிடைக்குமெனில், உலக அரங்கில் தமிழனின் பழம்புகழும், புதுப்புகழும் ஒரு சேர சொலிக்கும் என்பதில் ஐயமில்லை.

*மதம்கொண்ட வேழம்*
*அதம்செய்து போவதுபோல்*
*வதம்செய்து போனாயடி*
*கண்ணம்மாவுன் விழியம்பால்...*

*– கவின்மொழிவர்மன்.*

# இன்னும் கூட காத்திருக்கிறேன்

யௌவனம் கலையாமல்
மௌனத்தில் சிரிக்கிறாய் நீ
வெடித்த வெள்ளரிப்பழமாய்
உன் சிரிப்பு இன்னும்...

இருபது வயதில் இனியநிலா
என் அறுபது வயதிலும்
பௌர்ணமியாய் நீ...

கருணையில்லாக் காலம்
உன் நினைவுகளைச் சுமந்தே
கனக்க வைத்திருக்கிறது
விதியின் வழியில் முட்டிமோதி
வீதியில் சொரணையற்று நிற்கும்
செக்குமாடாய் ...

காலம் ஏகதடபுடலாகவே
கணக்குத் தீர்த்துவிட்டது
கூட்டிக் கழித்து, கொடுத்து, வாங்கி
கிடைத்த விடை பூஜ்ஜிய மே...

இந்த வயதிலும் தேவை நீ
உடலால் அல்ல
செத்துக் கொண்டிருக்கும்
என் உயிருக்கு அமுதமாக

மரத்துப்போன உயிர்
மழைக்காலத்து தேன்கூடாய் உடல்
சிலந்திவலைக்குள்  அகப்பட்ட பூச்சியாய்
படபடத்துத் தப்ப வழியின்றி
இன்னும் தவிக்கிறேன்..

என் அமிர்தவர்ஷுணி யே ..
என் உயிருக்கு உயிர்உயிர்கொடு
காலச்சக்கரம் வேகமாக உருண்டதில்
மனுவின் மகனாக தேருக்கடியில்..

யாருக்கும் கேட்கவில்லை
என் மரண ஓலம்
உனக்காகவது கேட்கிறதா...

காலதேவன் தன் புத்தகத்தில்
என் கணக்கைத் தீர்க்குமுன்
கைக் கொடுத்துக் காப்பாற்று
பூமிப் பந்தில் எங்கிருந்தாலும் வா..

இன்னும் காத்திருக்கிறேன்...


செ. இராசேந்திரன்
காந்திநகர், புதுவை 605009.






# அறுவடை

## உமாகண்ணன்

“நாம என்ன பாடுபட்டு இந்தப் பிள்ளைகள வளத்தோம்? ஆனா அதுகள் நமக்கு ஒருவேளை சாப்பாடு போடதுக்கே என்ன வருத்தப்படுது?!” என்று வருத்தத்தோடு கூறிய ராமசாமிப் பாட்டாவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

“இரண்டு கண்ணுலருந்தும் எப்பவும் கண்ணீர் வடிஞ்சிகிட்டே இருக்கு. இதுனால ஒண்ணையும் ஒழுங்கா பாக்கவும் முடியல” என்றபடியே தன் தோளில் கிடந்த அழுக்குத் துண்டில் கண்களைத் துடைத்துக் கொண்டார். உடுத்தியிருந்த வெள்ளை வேஷ்டி அழுக்குப் பிடித்து காவி நிறத்தில் இருந்தது. ஏதோ மரத்திலிருந்து ஒடித்த காய்ந்த கம்பு அவரின் கைத்தடியாக உதவிக் கொண்டிருந்தது. தலையில் ஓரிரு முடிகள் பெயரளவில் ஒட்டிக் கொண்டிருந்தது. பஞ்சடைத்த கண்களில் மாட்டியிருந்த தடித்த கண்ணாடியை தூக்கி விட்டு தூக்கி விட்டு பார்த்துக் கொண்டார். சதையில்லாத ஒடுங்கிய முகத்தில் பற்கள் தூக்கலாகத் தெரிந்தது. சுருங்கிய தோலுடன் இருந்த அவரின் சிவந்த தேகம், ஒட்டிய வயிறு, மெலிந்து போன கை கால்களுடன் பரிதாபமாகக் காட்சியளித்தது. உடல் மெதுவாக நடுங்கிக் கொண்டிருந்தது.

“எப்போ சுரேசு... சுரேசு...” என்று என்னை அழைத்தார் என் பாட்டி.

பக்கத்து அறையில் வீட்டுப்பாடம் எழுதியபடியே எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்த நான், ‘என்ன பாட்டி?’ என்றேன்.

“சரி பாட்டி’’ என்ற படி அடுக்களையில் நுழைந்தேன். அம்மா கிரைண்டரில் மாவை அரைத்தபடியே அடுப்பிலும் ஏதோ செய்து கொண்டிருந்தாள்.

“எம்மா, ராமசாமிப் பாட்டாவுக்கு காப்பி போட்டுத் தரணுமாம். பாட்டி சொன்னாங்க” என்றேன்.

காப்பியை ஒரு தம்ளரில் ஊற்றித் தந்த படியே “ஸ்டோர் ரூம்ல கிடக்க வாழைக்கொலைல பெரிய பழம் இரண்டையும் கூட கொண்டு போ” என்றாள்.

கொண்டு போய் ராமசாமிப் பாட்டாவிடம் நீட்டினேன். சோர்வான அவர் முகத்தில் லேசாக வெளிச்சம் தெரிந்தது.

“நீயாப்போ கொண்டு வாரே? நல்லா இருப்பா” என்றவர், பழத்தை உரித்து வாயில் வைத்த படி... “நான் நித்தம் வரவன் தானே? வரும்போதெல்லாம் காப்பி தரணுமா? தாணு கிட்ட கொஞ்ச நேரம் பேசிட்டுப் போனா கொஞ்சம் ஆறுதலா இருக்கும். அதான் வாரேன். சரி... பேசியாச்சி, காப்பியும் குடிச்சாச்சி... போய்ட்டு வாரேன்” என்ற படி காபியைக் குடித்து விட்டுக் கம்பை ஊன்றிய படி எழுந்தார்.

“தாணு போய்ட்டு வரட்டா? நான் போய்ட்டு வாரேம்மா!’ என்று பாட்டி தாத்தாவிடம் விடைபெற்றுக் கிளம்பினார். “வயசு எழுவது ஆனாலும் எமன் கூட்டிட்டுப் போவ மாட்டேங்கானே... இன்னும் எத்தனை நாள் பாடுபடணும்ணு எழுதி வச்சிருக்கோ தெரியலயே’ என்றபடி அவர் வாசற்படியில் இறங்கும் போது கையைப் பிடித்து உதவினேன். சந்தோசப்

பட்டவர், 'போயிட்டு வரேம்ப்போ... நல்லா படி' என்றவாறு தன் வீடு நோக்கி நடந்தார்.

தாத்தாவின் பால்ய சிநேகிதனான இந்த ராமசாமிப் பாட்டாவைப் பார்த்தால் ரொம்ப வருத்தமாக இருக்கும். தினமும் மாலை இரண்டு மணி நேரமாவது தாத்தாவிடம் வந்து பேசிவிட்டுப் போவார். இருவருக்கும் அந்தக்காலம் முதல் இந்தக்காலம் வரையுள்ள எல்லா கதைகளையும் பேசி பொழுது போகும். அவ்வப்போது அவரின் சொந்தக் கதையையும் சொல்லிச் சொல்லி வருத்தப்படுவார். அவரின் மனைவி ஐந்து வருடம் முன்பு இறந்ததிலிருந்து அவருக்கு என்ன வேண்டும் என்று கேட்டு சாப்பாடு கொடுக்கக் கூட ஆளில்லை. மூத்த மகன் வெளியூரில் உயர்ந்த பதவியில் இருக்கிறார். ஆனால் பெற்றவரைப் பார்க்கவோ உதவவோ மனமில்லை. வருடத்தில் ஒருமுறை வந்தாலே அபூர்வம். 'அவனுக்க பிள்ளைகள் யாருன்னு கூட எனக்குத் தெரியாது' என்பார் பாட்டா. அவரின் இரண்டாவது மகனோ 'வசதியா இருக்கும் மூத்த மொவனே பாக்கல... நான் பாக்கலன்னா மட்டும் குற்றமோ?' என்று குறை கூறியபடி திட்டிக் கொண்டே அவ்வப்போது சாப்பாடு கொடுப்பாராம். 'யார் கிட்டயும் கையேந்தாத நாம வயசான காலத்தில பிள்ளைகள்ட்ட இப்படி சாப்பாட்டுக்கு கையேந்தி நிக்க வேண்டியிருக்கே அய்யா...!' என்று சொல்லும் போதெல்லாம் கண்ணீர் வழியும். 'பென்சன் பணம் குடுத்தே இந்த கதின்னா அது இல்லன்னா தெருவுல விரட்டியிருப்பாவ போல' என்பார். கேட்கவே பரிதாபமாக இருக்கும்.

பத்து வருடங்களுக்கு முன்பு வரை தூய வெள்ளைச் சட்டை வேஷ்டியுடன் கம்பீரமாக வலம் வந்தவர் இன்று நடை தளர்ந்து அழுக்கு வேஷ்டி துண்டுடன் நடப்பது பார்க்க பரிதாபமாக இருந்தது. அவர் சென்றதும் தாத்தாவின் அருகில் சென்று அமர்ந்தேன்.

"தாத்தா... இந்த ராமசாமிப் பாட்டாவப் பாக்க பாவமா இருக்கு. அவருக்கக் கஷ்டத்த அவர் சொல்லும் போது நீங்க சும்மா தலைய மட்டும் ஆட்டறீங்க. ஆறுதலா எதாவது சொல்லலாமில்ல?" என்றேன்.

'எனக்கும் வருத்தமாத் தான் இருக்கும் புள்ளோ. ஆனா... நம்ம என்ன செய்ய முடியும்? அவரவர் தலையெழுத்த அவரவர் தான் அனுபவிக்கணும்' என்றாள் பாட்டி, வெற்றிலையை மென்று கொண்டே.

''என்ன பாட்டி எதுக்கெடுத்தாலும் தலையெழுத்து, தலையெழுத்துன்னு சொல்றீங்க? அப்படின்னா என்ன?"

"நாம செய்ற காரியங்களுக்கு ஏத்த மாதிரி தான் பலன் கிடைக்கும். அதத்தான் விதி, தலையெழுத்துன்னெல்லாம் சொல்லுவாவ புள்ளோ"

''அதுக்கும் ராமசாமிப் பாட்டாவுக்கும் என்ன சம்பந்தம் பாட்டி?"

"அவன் சின்ன வயசுல செஞ்சது அப்படி. ஏட்டி, ராமசாமிக்கக் கதையை அவனுக்குச்

## ஹைக்கூகள்

(மாற்றங்களுடன்)

**மாளிகை மேல் விழுந்த மர நிழலை**
**மடக்கி எறிகிறது**
**மாலைச்சூரியன்**

**குளத்தில் கல்லெறிந்ததும்**
**பறக்கத் தொடங்குகின்றன**
**கொக்குகளின் மீன்பிடிக் கனவுகள்**

**தேவையற்ற சிசுவின்**
**திறந்த வெளி முகவரியாகிறது**
**குப்பைத்தொட்டி.**

**வழுக்கி விழுகிறது**
**குளத்து நீர்ப்பாசியில் கால் பதித்த**
**காலைக் கதிர்.**

**'கொடி' யசைத்தது பூந்தோட்ட ஓணான்**
**பந்தயத்தில் ஓடுகின்றன**
**பட்டாம் பூச்சிகள்.**

முனைவர் வே. புகழேந்தி,
பெங்களூரு.

# இதய வாசல்

**ஆத்தங்கரை ஓரத்திலே
அரலிச் செடிகள் மத்தியிலே
அன்னமென நடந்து வர
அத்தான் மனம் துடிக்குதடி**

**அத்தமவளே அன்னாந்து தான்
அத்தானை பாரேன்டி
அத்தனையும் நாணமோ
அல்லது அகம் கொண்ட பாவமோ**

**சித்திரமாய் உனை வரைந்து
சிந்தையிலே வச்சிருக்கேன்
சீமை வழி போனாலும் என்
சிந்தை விட்டு போகாது**

**சீமை விட்டு வந்திருக்கேன்
சீக்கிரமாய் பதில் சொல்லு
மணம் நிறைஞ்ச மல்லிகையே
மன வாசல் திறந்திடடி**

## எ. தங்கமணி

சொல்லு. அப்பதான் அவனுக்கு மனசிலாவும்" என்றார் தாத்தா.

வெளியே சென்று வெற்றிலை மிச்சத்தைத் துப்பி விட்டு வாயைத் துடைத்தபடி வந்து அமர்ந்தாள் பாட்டி.

"இந்த ராமசாமி அண்ணனுக்க அப்பாவும் இளம் பிராயத்துல இவரப் போல நல்ல கலரா அழகா சினிமா ஹீரோ மாதிரி இருப்பாராம். ஆனா மொடாக் குடியன். அவருக்க அம்ம குடும்பம் நல்ல வசதி. ஆனா அவரப் பத்தி விசாரிக்காமலே கல்யாணம் பண்ணி வச்சிட்டாவ. ராமசாமி அண்ணன் பெறந்து இரண்டு வருஷத்துக்குள்ளே அவரு எல்லாத்தையும் வித்துக் குடிச்சி அழிச்சி செத்தும் போனாரு. குடும்ப உதவியும் இல்லாமப் போச்சி. மவன் ஒருத்தன் இருக்கான... அவ என்ன செய்வா? பாவம்... வயக்காட்டுல நெல்லு பொறுக்க, வெண்டக்கா வெட்ட, உளுந்து பறிக்க, வீடுகள்ல நெல்லு அவிச்சி குத்தி பொடைக்க, மாவிடிக்க, அது இதுன்னு கெடச்ச வேலையெல்லாம் செஞ்சி இவனுக்குக் கஞ்சி ஊத்துனா. படிக்க வச்சா. இவரு சின்ன வயசுல வெறும் சீக்காளி. அப்பப்ப உடம்பு சரியில்லாம ஆஸ்பத்திரிக்குக் கொண்டு ஓடுவா. இராப்பகலா வேல செஞ்சி இவரத் தேத்துனா. யாருக்கக் கால்லயெல்லாமோ விழுந்து கெஞ்சி கூத்தாடி இவரக் காலேஜ்ல படிக்க வச்சா. இவரும் படிச்சி நல்ல வேலை கெடச்சு. மளமளன்னு வீடு போட்டாரு. சுத்தி இடங்கள வாங்கிப் போட்டாரு. பெரிய பெரிய இடங்கள்லருந்து சம்பந்தம் தேடித்தேடி வந்துது. நல்ல வசதியான பொண்ண கல்யாணம் பண்ணுனாரு..." பாட்டி சற்றே நிறுத்தினாள்.

''இனிதான் க்ளைமாக்ஸே ஆரம்பிக்கும்'' என்றார் தாத்தா.

"க்ளைமாக்ஸா.?"

"ஆமா புள்ளோ! வந்தவ ரொம்ப பெரிய இடம். அவளுக்கு இவருக்க அம்மயக் கண்டாலே ஆவல. வேலக்காரியோட கேவலமா நடத்துனா. இவரும் ஒண்ணும் சொல்ல மாட்டாரு. வீட்டுல எல்லா வேலயும் செய்து கிட்டு ஒரு ஓரமா இருக்கணும். இரண்டு பிள்ளைகள் பெறந்து. அதையும் தொட உடமாட்டா. அவளுக்கு வருத்தமா இருக்காதா?"

"அது மட்டுமா? எதையாவது இவரு கிட்ட கோள் மூட்டி விட்டு இவரும் அடிக்க ஆரம்பிச்சாரு' என்றார் தாத்தா இடைமறித்து.

"ஆமா புள்ளோ... உடம்பு சரியில்லன்னு சொல்லப்புடாது, துணி எடுத்து கேட்கப்புடாது..."

"ஆனா, இவருக்க அம்மைக்கும் கொஞ்சம் வாய் கூடுதல் தான். எதையாவது கண்டமேனிக்குப் பேசுவா..." என்று தாத்தா இடையில் கூற,

"பட்ட பாடு கொஞ்ச நஞ்சமா புள்ளோ? பாவம். இதுல மனசும் உடஞ்சி, உடம்பும் கெட்டுப் படுக்கையில ஆயிட்டா..." என்று தொடர்ந்தார் பாட்டி.

“இளவுல போறவரு...! நல்ல வசதியாத் தான இருந்தாரு. ஒரு ஆள வச்சாவது தாயைப் பாத்திருக்கலாம்... பாக்கல. காம்பவுண்டுக்கு உள்ளயே வீட்ட வுட்டு கொஞ்சம் தள்ளி ஒரு ஓலப்பெரய வச்சி அதில கொண்டு போட்டாரு. ஏதாவது ஒரு நேரம் சாப்பாடு குடுத்தாலே பெரிய விஷயம். ‘நெறய தின்னுகிட்டு கிடையிலே பேண்டுட்டுக் கிடப்பா. பாக்க முடியமா’ன்னு சொல்வாரு. அவளோ ‘பசி,பசி... வயிறு காந்துவே!’ன்னு அழுவா. அக்கம் பக்கத்தில உள்ளவிய அப்பப்ப ஏதாவது குடுத்தாவ. அவியளுக்கும் ஒரே ஏச்சி. கொஞ்ச நாள்ல யாரையும் உள்ள வராம ஆக்கிட்டாவ.”

“ஐயோ அப்புறம்?” எனக்குப் படபடத்தது.

“அப்புறம் என்ன புள்ளோ? சொல்ல முடியாத பரிதாபம். பீக்கும், மோளுக்கும் மேலயே எத்தனை நாள் கிடந்தாளோ? ஒரே நாத்தம்...! ஒருநாள் செத்துப் போனாண்ணு சொல்லி தைலம்லாம் போட்டு குளிப்பாட்டி மாலை, கொட்டு மேளத்தோட அனுப்பி வச்சாரு”

“சே... இந்த பாட்டா இப்படியா செஞ் சாரு? செத்த பெறகு என்ன செய்து எதுக்கு பாட்டி?யு

“ஆமா புள்ளோ. பெத்ததுங்க, பெரியதுங்க உசிரோட இருக்க காலத்துல நல்லா பாக்கணும். செத்த பெறகு கொட்டு மேளத்தோட அடக்கம் பண்ணி விருந்து வச்சி எதுக்கு?”

“அதுனால தான் இப்பம் கிடந்து கஷ்டப்படுகான். அதத்தான் ‘ வினை விதச்சவன் வினைய அறுப்பான்; தினை விதச்சவன் தினைய அறுப்பான்’னு சொல்லது.” என்றார் தாத்தா.

“மாமா, மாமி சாப்பிட வாங்க...! சுரேஷ் சாப்பிட வாம்மா!.” அம்மா அழைத்தாள்.

“அப்பா வரட்டும் மா” என்றேன்.

“இதோ வந்துட்டேன்” என்ற படி உள்ளே நுழைந்தார் அப்பா.



## காதலுக்கு குத்தகைக் காரன்

சத்தமின்றி முத்தமிடும்
சாகசத்தைக் கற்றவனே!
முத்தத்தில் சாதனையை
முறியடிக்க யாருமில்லை
மொத்தத்தில் நீதானே!
காதலுக்கு குத்தகைக்காரன்
மலர் வருடும் போதுகூட
காம்பு குத்தும் என்னவனே!

உன் வருடல் எப்போதும்
உலகத்தில் மென்மைதான்
தென்றல் தழுவுதல் போல்
தினம் என்னை தழுவுகின்றாய்
மென்றுன்னை தின்னுகின்றேன்
மேனி சிலிர்க்கின்றேன்
மன்னவனே மாயவனே
என்னுயிரில் கலந்தவனே!

என்றைக்கும் இப்படியே
இருப்பாயா? சொல்லிவிடு!

**மு.பாலசுப்பிரமணியன்**
புதுச்சேரி

# எனக்கு சம்மதமில்லை

எதற்காகவும், யாரையும் நான்
காத்திருக்க வைத்ததில்லை.
காத்திருப்பதில் எனக்கும்
ஏனோ சம்மதமில்லை.

காக்க வைப்பவனிடமில்லை,
காத்திருப்பவனிடத்தில்
கேட்டுப் பாருங்கள்.
அவன் சொல்லுவான்.

காத்திருத்தல் என்பது
மிகக் கொடுமையானது.
காத்திருத்தல் என்பது
காலத்தைக் கொல்வது.

காத்திருத்தல் காதலில்
வேண்டுமானால்
புனிதமாக இருக்கலாம்.
ஆனால்,அது மனிதமில்லை.

காத்திருந்தால் தான் காதல்
என்ற என் வாலிப நாட்களில்
காதலை துறந்தவன் நான்.
காலத்தைத் துறக்கவில்லை.

இருந்தாலும், பல நேரங்களில்
காத்திருத்தல் என் மீது
மிக பலவந்தமாகத் தான்
திணிக்கப் படுகிறது.

யாருக்காகவாவது நான்
காத்திருக்க வேண்டுமென்றால்
அவர்கள் உயர்ந்து விடுகிறார்கள்.
நான் தாழ்ந்து விடுகிறேன்.

காதலிகள் கிடைப்பார்கள்.
நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள்.
உறவுகள் கூட கிடைக்கும்.
காத்திருந்த காலம் கிடைக்குமா?

காலத்தோடு பயணிக்கவே
ஆசைப் படுகிறேன்.
சம்மதம் என்பவர்கள் மட்டும்
என்னோடு பயணிக்கலாம்.

எதற்காகவும், யாரையும் நான்
காத்திருக்க வைத்ததில்லை.
காத்திருப்பதில் எனக்கும்
ஏனோ சம்மதமில்லை.

அகன்
அனுராதா கட்டபொம்மன்

## துளிப்பாக்கள்

கைம்பெண்ணிற்கு பூ
சமூகம் சூடுகிறது
நிழற்படத்தின் மேல்

தெருவோரக் குழந்தை
அன்பின் குடிலில் மகிழ்கிறது
தாயின் சேலை

நலத்திட்ட கோப்புகள்
அங்கங்கே முளைத்திருக்கும்
கரையான் புற்றுகள்

சா. கா. பாரதி ராஜா




கவிஞர் நவஜீவன் அவர்களின் தொப்புள்கொடி பூத்த காடு எனும் கவிதை நூல் கவிதை தோட்டத்தில் பூத்த நினைவுக்கூடு. அகநி வெளியீட்டில் வெளிவந்திருக்கும் இந்நூல் கவிஞரின் இரண்டாவது கவிதை நூல். எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் சமர்பணமாகியுள்ள இந்நூல் தனையீன்ற தமிழுக்கும் சமர்பணமாகியுள்ளது. இவரின் முதல் கவிதை தொகுப்பு "கரிக்கோட்டு வானவில்". ஏறக்குறைய பதினெட்டு ஆண்டுகள் பிறகு தம் இரண்டாவது நூலை வெளியிட்டுள்ளார்.

"வெறும் வாசிப்பிற்கான கவிதையாக மட்டும் சுருங்கிவிடாமல், சமூகம் குறித்த மீள்பார்வைக்கு அழைத்துச் செல்வதே இக்கவிதை தொகுப்பின் தனித்துவம்" எனும் மு. முருகேசு அவர்களின் வாழ்த்துரையே இந்நூல் சிறப்பிற்குச் சான்று. ஆனந்தவிகடன், தீராந்தி, காக்கைச் சிறகினிலே போன்ற சீற்றிதழ்களில் இவரின் கவிதைகள் பல வெளிவந்திருக்கின்றன்.

காற்றின் கைதியாய்
ஒற்றைச் சிறகு
புயலையும் பின்தள்ளிப் பறந்திடும்

பறத்தலின் திசையில் ஒற்றைச் சிறகின் வாழ்வாக நம் அலையும் வாழ்வு தரும் நம்பிக்கையை சுட்டிச் செல்கிறார். இன்றும் பெண்களுக்குப் பெரும் சிக்கல்கள் இருக்கிறது. அந்தச் சிக்கல்களை துணிச்சலோடு எதிர் கொளவதைக் காட்டிலும் சந்தேகப்பட்டு முன்னுணர்வுகொண்டு தம்மை காத்துக்கொளவதே சிறப்பு என..

நாக்கைத் தொங்கப் போட்டபடி
காத்திருக்கின்றன தூண்டில்கள்

என எச்சரிக்கை செய்கின்றார். மூஞ்சி என இயல்பாகப் பேசத்தோன்றும் வார்த்தையை வைத்து பிறர் முகத்திரையைக் கிழிக்கும் கவிதை

மன்றாடிய தன்முகம் அவருக்கு
மலக்குழிபோல் தோன்றியதோ...

மேலும் குழந்தைகளுக்குத் தன்முகம் எப்படித் தோன்றுகிறது என ஐயப்பட்டு,

"குழந்தை மாதிரியா
கோமாளி மாதிரியா"

தான் குழம்புவதாகக்கூறி, முடிவில் முகம் பார்த்துச் சிரிக்கிறார்கள், அதுபோதும். என தன்னையே சாந்தப் படுத்திக்கொள்கிறார்.


மலை முழுங்கிகள் எனும் தலைப்பில், ஆளும் வர்க்கத்தின் சுரண்டலை கிண்டல் செய்வதாக இருக்கிறது.

அதெப்படி
சிந்தாமல் சிதறாமல்
ஆயிரங்கோடிகளைச் சாப்பிட முடிகிறது,

பேச்சாலானது எனும் தலைப்பில்,

மயிற்பீலியாய் வருடிடும்
வார்த்தைகள் வில்லின் நாண் போல்.

வாழ்க்கையில் சேமிக்கும் வைப்புநிதியம் உந்திடும் வார்த்தைகளாகஇருப்பதை அழகியலாக்குகின்றார். ஒரு காதல் இளவரசன் கழுவேற்றப்பட்டான், அவனது அஸ்தியை தண்ணீரில் கரைக்காதீர்கள், நிசமான காதலர்களின் கண்ணீரில் கரையுங்கள் என நம்மை நெகிழச்செய்கிறார். இவை போன்று நெஞ்சை நெகிழச்செய்யும் கவிதைகள் ஏராளமாகக் காணக்கிடைக்கின்றன. இறுதியாக உள்ள கவிதை பயங்கரவாதம் அழகானது எனும் தலைப்பில்




எழுதப்பட்ட கவிதை.

எங்கள் பாலைவனத்தின்
கடைசி ஈச்சமரத்தை
எங்கள் வானத்தின்
எஞ்சிய நட்சத்திரங்களை
எங்கள் தாய்க்குலத்தின்
நெஞ்சகத்தில்ஙமிஞ்சிய பாலை
காத்துநிற்கிறோம் எனில்

இதுதான் நாங்கள் செய்த பாவம் எனில் பயங்கரவாதந்தான் எவ்வளவு அழகானது. இந்தக்கவிதை சிரியநாட்டு கவிஞர் நிசார்சு பாணியின் "revisiting 9/11" என்ற கவிதையின் தமிழாக்கம் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. கவிதை படைக்கவும் கவிதை மொழிபெயர்க்கவும் ஆற்றலுடைய அவருக்கு கவிதை கைக்கூடி வந்திருக்கிறது. நவஜீவனின் கவிதையை படித்து இன்புறுவதோடு, உரக்கச் சொல்வோம் உலகுக்கு.

பக்கங்கள்: 144/ விலை: 90 ₹
அகநி வெளியீடு



# கவலை இல்லாத உள்ளம் வேண்டும்

கவலை இல்லாத உள்ளம் வேண்டும்
கண்ணீர் வராத கண்கள் வேண்டும் ,
எல்லை இல்லாத அன்பும் வேண்டும்
எதற்கும் அஞ்சாத ஆற்றல் வேண்டும் .

இன்னல் தந்திடாத இல்லாள் வேண்டும்
இருப்புக்கு ஏற்ற செலவே வேண்டும் ,
உண்ணும் உணவில் உழைப்பு வேண்டும்
உயர நினைப்போர்க்கு முயற்சி வேண்டும் .

பள்ளமும் மேடும் சமமாய் வேண்டும்
பார்க்கும் பார்வையில் கருணை வேண்டும் ,
வெள்ளம் வறட்சியை மறைத்திட வேண்டும்
வேதனை என்பதை வீழ்த்திட வேண்டும் .

பறவையும் விலங்கும் பக்கத்தில் வேண்டும்
பலன்தரும் மரங்களும் பார்வையில் வேண்டும்,
உறவை வளர்க்கும் உபாயம் வேண்டும்
உன்னத கலைக்கு உயிரும் வேண்டும் .

கோபத்தைக் குறைக்கும் குணமும் வேண்டும்
கொஞ்சி மகிழ்ந்திட குழந்தையும் வேண்டும் ,
பாவம் செய்தலைத் தடுத்திட வேண்டும்
பயங்கரம் புகுதலை நிறுத்திட வேண்டும் .

சுற்றம் உறவும் சூழ்ந்திட வேண்டும்
சுகமாய் அனைவரும் வாழ்ந்திட வேண்டும் ,
மற்றவர் கருத்தினை மதித்திட வேண்டும்
மாநிலம் தழைக்க உழைத்திட வேண்டும் .


**கவிஞர்.அ.முத்துசாமி,**
**தாரமங்கலம்**






**கவிச்சுடர் க.நா. கல்யாணசுந்தரம் அவர்கள், நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இலக்கிய உலகில் தடம் பதித்து வருபவர். மரபுக்கவிதை புதுக்கவிதை என்பவற்றில் ஈடுபாடு காட்டி எழுதி வருவதோடு பிற மொழிக் கவிதை வடிவங்களான ஹைக்கூ, நானிலு என்பவற்றையும் தமிழில் சிறப்பாகக் கையாள்பவர். ஆய்வுக்கட்டுரைகள் மூலமும் தொகுப்புகளினூடாகவும் தமிழில் அவ்வடிவங்களின் செழுமைக்காகவும், வாசகர்களின் புரிதலுக்காகவும் உழைப்பவர்... பரந்துபட்ட இலக்கிய ஆற்றலுடைய கவிச்சுடர் க.நா. கல்யாண சுந்தரம் அவர்களை தமிழ்நெஞ்சம் இதழுக்காக நேர்கண்டோம்.**

# ஞானம் போற்றி வாழ்பவர்



**கவிச்சுடர் அவர்களே, இலக்கிய உலகில் தடம் பதித்திருக்கும் உங்களைப் பற்றி அறிய விரும்புகிறோம். உங்களின் சுய விபரத்தில் இருந்து அதனை ஆரம்பிக்கலாம். கல்வி, வகித்த பதவி என்பன குறித்து..?**

கல்வி: எம்.ஏ., பொருளாதாரம் (MA Economics); PGDPM (Postgraduate diploma in personnel management; CAIIB (Certificated Associate in Indian Institute of Bankers) யூனியன் வங்கியில் மேலாளராகப் பணி செய்து ஓய்வு. முப்பத்தி எட்டு ஆண்டுகள் வங்கிப் பணி.



**நான்கு தசாப்த கால இலக்கியப் பணியில் நீங்கள் வெளியிட்டுள்ள நூல்கள்..?**

மனிதநேயத் துளிகள் (ஹைக்கூ நூல்) The Smile of Humanity (ஆங்கில மொழிபெயர்ப்பு - ஹைக்கூ நூல்), மனசெல்லாம் (ஹைக்கூ நூற்றாண்டில் வெளியிடப்பட்ட ஹைக்கூ நூல்) வெளிச்ச மொழியின் வாசிப்பு ( புதுக்கவிதை

நூல்), நான்..நீ..இந்த உலகம் (தன்முனைக் கவிதைகள் தொகுப்பு நூல்)

**தமிழில் மாத்திரமல்லாது, உங்கள் படைப்புகள் வேற்று மொழிகளையும் சென்றடைந்திருக்கின்றன. அவை குறித்து..?**

மனிதநேயத் துளிகள் ஹைக்கூ நூல் ஆங்கிலத்தில் "the smile of humanity" என்ற தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது.

நூற்றுக்கும் மேற்பட்ட ஹைக்கூ கவிதைகள் ஜெர்மன், தெலுங்கு, மலையாளம் மற்றும் ஜப்பானிய மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டன.

ஜப்பான் நாட்டில் உள்ள புகழ்பெற்ற "Akita International Haiku Society " என்ற அமைப்பு எனது ஹைக்கூ கவிதைகளை அங்கீகரித்து ஜப்பானிய மொழியில் மொழிபெயர்ப்பு செய்துள்ளது. யுனெஸ்கோ பல்கலையில் சுவர் பெயிண்டிங் செய்ய எனது ஹைக்கூ கவிதைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

தெலுங்கு மற்றும் மலையாள மொழியில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட ஹைக்கூ கவிதைகள் "wonderhaiku world" எனும் அமைப்பு வெளியிட்டு சிறப்பு செய்துள்ளது.

**நானிலு என்ற பிற மொழிக்கவிதையிலும் உங்களுக்கு ஈடுபாடு உள்ளது. இது தொடர்பாக குறிப்பிடுங்கள்..?**

தெலுங்கில் மிகப் பிரபலமான "நானிலு" வகைமைக் கவிதைகள் நான்கு வரிகள் கொண்டவை. முதல் இரண்டு வரிகள் ஒரு செய்தியும் அடுத்த இரண்டுவரிகள் அதனுடன் தொடர்பு கொண்ட அல்லது முரணான செய்தியும் கொடுக்க வல்லது.

நானிலு கவிதைகளின் பிரம்மா என்று அழைக்கப்படுபவர் கோபி அவர்கள் இவரது சீடர் ஷிஸி பல்லவம் அவர்களின் கவிதை ஒன்று :

**"அரிசி மணி மீது**
**சித்திரம் அழகுதான்**
**அது பருக்கையாகும் போது**
**இன்னும் அழகு"**

இதுபோன்ற கவிதைகளை தெலுங்கில் மூலக் கவிதையாக வடிவெடுத்ததை தமிழில் எழுத்தாளர் சாந்தாதத் அவர்கள் கட்டுரை வடிவில் கொடுத்தபோது எனது மனதைப் பறிகொடுத்தேன்.

தமிழில் இதற்கு ஒரு பெயர் கொடுக்க வேண்டும் எனத் தோன்றியது. தன்னிலிருந்து எதிரில் இருக்கும் நபரையோ பொருளையோ இயற்கையையோ நம்மை ஈடுபடுத்திக் கொண்டு எழுதப்படுவதால் நான் இந்த தமிழ்க் கவிதை வடிவத்துக்கு " தன்முனைக்கவிதைகள் " எனப் பெயரிட்டு ஒரு குழுமத்தையும் துவக்கினேன். ஐம்பதுக்கும் மேற்பட்ட கவிஞர்கள் (ஈழத்துக் கவிஞர்கள் ஐவர் உள்பட) தொடர்ந்து எழுதினர்.

இவர்களில் 31 கவிஞர்களின் கவிதைகள் முதல் தொகுப்பாக "நான்.. நீ.. இந்த உலகம்" நூல் வெளியாகிறது. தற்போது நல்ல வரவேற்பு பெற்றுள்ள கவிதைவடிவம்.

**உங்களின் இலக்கியப்பயணத்தில் கலந்து கொண்ட விழாக்கள், கருத்தரங்குகள், கவியரங்குகள், ஆய்வரங்குகள் என்பவை பற்றி...**

பாரதிதாசன் நூற்றாண்டு விழா, பதினைந்து முகநூல் குழுமங்களின் ஆண்டுவிழா மற்றும் ஹைக்கூ கவியரங்கத் தலைமை. ஹைக்கூ கருத்தரங்கம் போன்றவை. கவிஞர் வைரமுத்து பங்கேற்ற " காலந்தோறும் தமிழ் "ஆய்வரங்கம் இதில் காலந்தோறும் தமிழ் ஹைக்கூ கவிதைகள் எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்து பாராட்டு பெற்றது. குறிப்பாக இலங்கை ஓட்டமாவடியில் உள்ள நுட்பம் இலக்கிய அமைப்பில் எனது நூல் "மனசெல்லாம்" ஹைக்கூ நூலுக்கு விருது வழங்கப்பட்டது. ஜெர்மனியில் இருந்து வெளியாகும் இளைஞன் மற்றும் கவிநெஞ்சம் இதழ்களில் எனது கவிதைகளும் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. தமிழகத்தில் சுமார் முப்பது இலக்கிய இதழ்களில் கவிதைகள் வெளிவந்துள்ளன. சென்னை அடையாறு நூலகத்தில் ஹைக்கூ நூற்றாண்டு கருத்தரங்கில் கலந்துகொண்டதும் சிறப்பு.

**நான்கு தசாப்த கால அனுபவமுடைய நீங்கள் இளைய தலைமுறைக்**

### கவிஞர்களுக்கு சொல்ல விரும்புவது..?

இளம் கவிஞர்கள் பெருமளவில் ஹைக்கூ கவிதைகள் எழுதி வருகிறார்கள். ஹைக்கூ பற்றிய புரிதல் குறைவாகத்தான் இருக்கிறது. அடிப்படை ஹைக்கூ விதிகளையாவது பின்பற்றி வார்த்தை சுருக்கமுடன் எழுதுவது சிறப்பு.

மரபு மற்றும் புதுக்கவிதைகளை தொடர்ந்து எழுதுவது தமிழ் அன்னைக்கு நாம் செய்யும் சிறப்புத் தொண்டு என்று கவிஞர்கள் உணர வேண்டும். மொழியில் மாற்றங்கள் கவிதைத் தளத்தில் வரலாம்... அதனை வரவேற்பது அனைவரதும் கடமை. இதனால் தமிழ் மொழியின் தொன்மை அழியாது. இலக்கியம் சார்ந்த நுண்ணறிவு பெற்றால் கூடுதல் சிறப்பு.

நாம் குறிப்பிட்டத் துறையில் சிறந்து விளங்குகிறோம்..கற்க இனி ஒன்றும் இல்லை என்று நினைப்பது தவறு. கற்றது கைப்பிடி அளவு... கல்லாதது உலகளவு...என்பதை நினைவில் நிறுத்த வேண்டும்.

### ஹைக்கூ கவிதைகள் தொடர்பாக அதிக அக்கரை செலுத்தும் ஒருவராக இலக்கிய உலகம் உங்களை மதித்து வைத்திருக்கின்றது. எதிர் காலத்திலும் இது தொடர்பில் ஏதாவது திட்டங்கள் உண்டா?

தற்போது துவக்கியுள்ள "உலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம்" முகநூலினை சிறந்த பதிவு பெற்ற அமைப்பாக மாற்றி ஆண்டுதோறும் சிறந்த ஹைக்கூ கவிஞர்களுக்கு விருதுகளும் சான்றுகளும் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஹைக்கூ நூலகம் ஒன்றும் Haiku Trust ஒன்றும் ஏற்படுத்த வேண்டும் என்பதும் எனது ஆவல்.

### எதிர்காலத்தில் நீங்கள் வெளியிடவுள்ள நூல்கள் தொடர்பாக...

தமிழிலக்கிய வரலாறு மிக மிகத் தொன்மையானது. புறநானூற்றுச் செய்திகள் தமிழ் மண்ணின் கடை ஏழு வள்ளல்களின் ஆளுமைத் திறன், வீர மரபு, புலவர்களை ஆதரித்தல், மனிதவள மேம்பாடு, கொடைத் திறன் மற்றும் மண்ணின் வளமை பற்றி பல்வேறு கோணங்களில் நமக்குத் தருவன என்பதை எவராலும் மறுக்க முடியாது. இந்த நூலில் மிகச் சிறந்த நாற்பது பாடல்களை எளிய தமிழ்ச் சொல்லில் மூன்று மூன்று வரிகளில் "அறிவோம் புறநானூறு மூன்று அடிகளில்" என நாற்பது தொடர்களாய் எழுதியுள்ளேன். எனது முகநூலிலும் பதிவிட்டுள்ளேன். விரைவில் நூலாக வெளிவர உள்ளது.

மேலும், கம்பராமாயணத்தில் கம்பனின் கவிச் சுவையைப் பல்வேறு கவிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். இதிலிருந்து மாறுபட்டு கம்பனின் சொல்வளம், கவிதை நயம் இவற்றை கண்ணதாசன் தனது பாடல் வரிகளில் எடுத்தாண்ட விதங்களை கட்டுரைவடிவில் இதுவரை இருபது தொடர்கள் எழுதியுள்ளேன். தமிழ்நெஞ்சம் மின்னிதழிலும் வெளிவந்துள்ளது. இந்தக் கட்டுரைகள் நூலாக வெளிவரவுள்ளது.

### மரபுக் கவிதை புதுக் கவிதை இவற்றில் நீங்கள் அதிக ஈடு பாடு காட்டுவது..?

பள்ளி, கல்லூரி நாட்களில் காவியப்பாவை, மலைச்சாரல், அமுதசுரபி போன்ற நூல்களில் எனது மரபுக் கவிதைகள் வெளிவந்துள்ளன. பின்பு புதுக் கவிதைகள் எனை ஆட்கொண்டு பல புதுக்கவிதைகளை சுந்தரசுகன், வள்ளியூர் டைம்ஸ், கவிதை உறவு, தமிழ் மூவேந்தர் முரசு, நாளேடுகள் பலவற்றில் எழுதி வந்தேன். புதுக்கவிதை எழுத உந்துதலாய் இருந்தவர்கள் கவிஞர் மு. மேத்தா, கவிக்கோ அப்துல் ரகுமான் மற்றும் கவிஞர் ந.காமராசன் போன்றோர். மரபில் சொல்ல முடியா கருத்துகளை எளிய தமிழ் நடையில் வியக்கும் வகையில் புதுக்கவிதை நமது கருத்துகளை மக்களிடம் கொண்டுசெல்ல பாலமாய் அமைந்தது.

**"கண் இளைப்பாறிட தூக்கமுண்டு**
**கழுதை இளைப்பாறிட துறையுமுண்டு**
**பண் இளைப்பாறிட தாளமுண்டு எங்கள்**
**பசி இளைப்பாறிட உண்டோ இடம்"**

இவைகவிக்கோவின்புதுக்கவிதைவரிகள்....என்னுள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியவை.

**"காடு வௌஞ்சென்ன மச்சான் நமக்கு**
**கையும் காலும் தானே மிச்சம்"**

... என்கிற பட்டுக்கோட்டையாரின் வரிகளை எனக்கு நினைவுபடுத்திச்செல்லும்.

### இன்றைய காலம், ஹைக்கூக்களின் காலம் என்று கூறப்படுகிறது. அதுபற்றி...

1996 ஆண்டு முதல் 2006 வரையில் செய்யாறு தமிழ்ச் சங்கத்தின் நிறுவனத் தலைவராக பணியாற்றியபோது கவிஞர் மகா.மதிவாணன், மு.முருகேஷ் போன்றோரின் வழிகாட்டுதல் பேரில் எனக்கு ஹைக்கூ கவிதையில் மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது. 1998ல் எனது முதல் ஹைக்கூ கவிதை நூல் "மனிதநேயத் துளிகள்" ஆங்கில மொழிபெயர்ப்புடன் இருமொழிகளில் வெளிவந்தது. இந்த நூலில் இருந்து பல கவிதைகள், ஜேர்மனி, தெலுங்கு, ஹிந்தி, மலையாளம் மற்றும் ஜப்பானிய மொழிகளில் மொழிபெயர்ப்பானது. கடந்த இருபத்தி மூன்று ஆண்டுகளில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் ஹைக்கூ கவிதைகள் எழுதியுள்ளேன். தற்போது அறுநூறுக்கும் மேற்பட்ட தமிழ் ஹைக்கூ கவிதை நூல்கள் வெளிவந்துள்ளன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஹைக்கூ கவிஞர்கள் முனைப்புடன் எழுதி வருகின்றனர்.

தமிழில் ஹைக்கூவை "ஹொக்கு" என அறிமுகப் படுத்தியவர் பாரதியார். நூறு ஆண்டுகளுக்கு முன்னதாக ஹைகூவை 1916ல் சுதேசமித்திரன் பத்திரிகையில் ஜப்பானிய ஹைக்கூ வடிவம் பற்றி தமிழில் கட்டுரையாக கொடுத்த பெருமை மற்றும் அறிமுகம் செய்த பெருமை முண்டாசுக் கவிஞர் பாரதியாரைச் சேரும். இதனையே அறிமுக ஆண்டாகக் கருத்தில் கொண்டு தமிழ் ஹைக்கூ கவிதைகளின் நூற்றாண்டு கொண்டாடி முடித்துள்ளோம்.

ஹைக்கூ அறிமுகப் படுத்திய காலங்களில் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள், புகழ்பெற்ற பல ஜப்பானிய ஹைக்கூ கவிதைகளை தமிழில் மொழிபெயர்த்து கொடுத்தார். கட்டுரைகள் பல எழுதினர். இதுவே பலருக்கு உந்துசக்தியாக மாறியது.

**"இந்த அழகிய கிண்ணத்தில்**
**பூக்களை அடுக்கி வைப்போம்**
**அரிசிதான் இல்லையே"**
(ஹைக்கூ தந்தை பாஷோ)

**"உதிர்ந்தமலர்**
**கிளைக்குத் திரும்புகிறது**
**ஓ... வண்ணத்துப் பூச்சி"**
(கவிஞர் மோரிடாக்கே)

**"என் வீடு எரிந்துபோனதால்**
**நன்றாகப் பார்க்க முடிகிறது**
**உதிக்கும் நிலாவை"**
(கவிஞர் மாஷாஹிடே)

இதுபோன்ற மொழிபெயர்ப்பு ஹைக்கூ கவிதைகளே மூல ஹைக்கூ கவிதைகளாகக் கொள்ளலாம். இவை மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தின என்றும் கூறலாம்.

(நன்றி: கவிக்கோ அப்துல் ரகுமானின் "இன்றிரவு பகலில் "விமர்சனக் கவிதைப் புத்தகம்)

### தமிழில் ஹைக்கூ கவிதைகளின் வளர்ச்சி

தமிழில் முதல் ஹைக்கூ நூலாக வடிவெடுத்தது கவிஞர் அமுதபாரதி அவர்களின் "புள்ளிப் பூக்கள்"

**"இந்தக் காட்டில்**
**எந்த மூங்கில்**
**புல்லாங்குழல்"**

எனும் இவரது ஹைக்கூ கவிதை தமிழ் ஹைக்கூ கவிதை உலகில் என்றுமே நிலைத்திருக்கும். கணையாழி ஹைக்கூ பற்றிய கட்டுரைகளை பல்வேறு கால கட்டங்களில் பதிவு செய்து வந்துள்ளது.

ஹைக்கூ ஆய்வாளர்கள் தமிழில் நல்லதொரு தடம் பதித்து வருகிறது ஹைக்கூ கவிதைகள் என விமர்சனப் பார்வையில் கருத்திட்டுள்ளது வரலாற்றுப் பதிவாகி உள்ளது.

தற்போது முகநூலில் பல தளங்கள் இயங்கி வருகின்றன. ஹைக்கூ கவிஞர்களுக்கு வழிகாட்டியாகவும் உள்ளன. "ஹைக்கூ உலகம், ஹைகூவும் ஒருகோப்பை தேநீரும், உலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம், ஹைக்கூ தோட்டம், ஹைக்கூ படர்பார்வை மேலும் பல முகநூல் தளங்களும் வலைப்பூக்களும் உள்ளன.

சந்திப்பு :
பாவேந்தல் பாலமுனை பாறூக்

# நீ ஒரு அதிசயம்

காவிரி ஆற்றின் குறுக்கே
　　கல்லணை கட்டிய கரிகாலன்
காவிரியின் கரைகளையும் உயர்த்தினான்
　　காவிரி,கொள்ளிடம் பிரியுமிடத்திலும்
காவிரி, கொள்ளிடம் சேருமிடத்திலும்
　　கரிகாலன் நுணுக்கமாக கல்லணையைக்
காவிரியின் மீதுக் கட்டினான்
　　கரிகாலன் காலம் கி.மு 65முதல் கி.பி.18 வரை

தன்னுடைய சோழ நாட்டிற்காகவும்
　　தன்மக்கள் பெரிதும்வாழவும்-நாட்டை
பொன் விளையும் பூமியாக்கினான்
　　பகை யழித்துக் காத்தான்
அன்னை மண்ணில் கட்டிய
　　அணை 'கிரேட்டேம்' என்றான்
அந்நியன் ஆங்கிலேயன் இன்றுவரை
　　அன்று முதல் இன்றுவரை

கல்லணைக்கு நிகரொத்த அணை
　　காண்பதேது இவ்வுலகில்-சோழ
மல்லனை எதிர்த்த எதிரிகளும்
　　மடிந்தனர்,புற முதுகிற்றோடினர்
அல்லும் பகலுமாய் கட்டி
　　ஆசையுடன் உருவாக்கியஅணை-காலம்
சொல்லும் உலகு உள்ளளவும்
　　நீயொரு உலக அதிசயம்தானென்று.

கி.ஜெகன்நாதன்



# பாலக்கட்டை



சோலச்சி
புதுக்கோட்டை

தற்போது பாலக்கட்டைகள் இல்லாத ஊர்களையே பார்க்க முடியாது. ஒவ்வொரு பாலக்கட்டைக்கும் ஏகப்பட்ட வரலாறுகள் இருக்கும். அப்படித்தான் அரங்கியான்பட்டியிலும் இரண்டு பாலக்கட்டைகள் இருக்கிறது. அந்த ஊருக்குள் செல்ல வேண்டுமானால் அந்த குறுகிய பாலங்களின் வழியாகத்தான் செல்ல முடியும்.

அந்தப் பாலம் கட்டுவதற்கு முன் அந்தப் பகுதி மக்கள் கால்வாய்க்குள் இறங்கித்தான் சென்று வந்தனர். அந்தக் கால்வாய் ஒன்றை ஆள் மட்டம் உயரமும் ஒரு பனை தூரம் அகலமும் இருந்தது. மழைக்காலங்களில் பெருக்கெடுத்து ஓடும் நீரால் ஊர் தீபகற்பமாய் காட்சிதரும். ஊரை வளைத்து வயல்காட்டு வழியாகத்தான் மாட்டு வண்டிகள் ஊருக்குள் வந்தன. இப்படி வளைத்து செல்வதற்காகவே பலரும் மிதி வண்டிகளை தவிர வேறு எந்த வண்டியும் வாங்காமல் இருந்தனர்.

பலமுறை மனு கொடுத்தும் யாராலும் கண்டுகொள்ளப்படவே இல்லை. ஒவ்வொரு முறை தேர்தல் வரும் போதெல்லாம் ஊருக்கு பாலம் கட்டித்தருவதாக சொல்லி வாக்கு கேட்டு வந்து செல்வதோடு சரி. யாரும் கட்டித்தர முன் வந்ததே இல்லை.

சிவப்புச் சட்டை முத்துக்குமரன் தலைமையில் நடந்த உண்ணாநிலை போராட்டம்தான் திருப்பு முனையாக அமைந்தது. காந்திநகர் மக்களை எல்லாம் ஒன்று திரட்டி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தொடர் உண்ணாநிலை போராட்டத்தை அறிவித்து இருந்தார். மற்றவர்கள், எங்களுக்கு மாட்டு வண்டிகள் இருக்கிறது, அதுமட்டுமல்ல கலெக்டர் எங்க சாதிக்காரு அவர பகச்சுக்கிட்டு போராட முடியாது. அதுவும் பட்டினி போராட்டம் நமக்கு ஒத்தே வராது என்று சொன்ன பிறகுதான் ஆத்தூர் சிவப்புச் சட்டை கட்சியின் மாவட்ட செயலாளர் முத்துக்குமரன் காந்திநகர் மக்களை மட்டும் வைத்து போராடுவது என்ற முடிவுக்கு வந்தார்.

மூன்றுநாள் போராட்டத்திற்கு பிறகு ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர் செழியனின் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பாலம் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டது. முத்துக்குமரனோ, உயிரை பணயம் வைத்து போராடியது காந்திநகர் மக்கள். அதனால் அவர்கள் பகுதிக்கு நேராக கட்ட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்ததும் அதை எதிர்த்து போராட்டம் ஒன்றை மற்ற தெருக்காரர்கள் அறிவித்து இருந்தனர்.

''அவங்க தெருவுக்குள்ள போயி நாம வர்றதா... பாலமே கட்டாட்டியும் பரவாயில்லை. வண்டி வாசில போறவுக ஊர வளச்சு போகட்டும்...''

"காவாய் அப்புடியே கெடந்துட்டுப் போவுது. காவாய்க்கிள்ள எறங்கி ஏறுனா சத கொறஞ்சு போகாது..."

''எல்லாத்துக்கும் அந்த செவப்பு சட்டக் காரன்தான் காரணம். நமக்கிட்ட வயவாக்காலுக்கு வேலக்கி வரணும்னுதான் அந்த பஞ்சுமில்ல என்னன்னத்தையோ பண்ணி இழுத்து மூட வச்சோம். அதயும் அவன்தான் தெறக்கவச்சு அவனுகள அங்க மறுபடியும் வேலக்கி போக வச்சான்.. அவன நம்ம கட்சி தலைவருககிட்ட சொல்லி கொஞ்சம் அடக்கி வைக்கச் சொல்லனும்...'

இப்படியாக அந்த ஊருக்குள் பேச்சுகள் வெளிக் கிளம்பின. அதனால்தான் எந்த அரசாங்கமும் அந்த ஊருக்கு பாலம் கட்டித்தர முன்வரவே

இல்லை. வந்த பாலத்தை இழந்துவிடக்கூடாது என்பதற்காகவே காந்திநகர் மக்களை முத்துக்குமாரன் சமாதானப்படுத்தினார். மேலப்பக்கம் பாலம் கட்ட அவர்கள் ஒத்துக்கொண்டனர். பாலம் கட்டி முடிக்கப்பட்ட ஒருசில மாதங்களிலேயே காந்திநகர் மக்கள் வசிக்கும் பகுதிக்கும் ஒரு குறுகிய பாலம் கட்டிக் கொடுக்கப்பட்டது.

பாலம் கட்டியதிலிருந்து ஊரின் பஞ்சாயத்து மேடையாகவே மேலப்பக்கம் பாலக்கட்டை மாறிப் போயிருந்தது. மேல பாலக்கட்டை அருகே புதிதாக கட்சிக் கம்பங்கள் கட்சிக் கொடிகளை தாங்கி பறக்க ஆரம்பித்தன. பாலக்கட்டையையும் கட்சிக் கொடியும் இருப்பதுதான் ஊர் இருப்பதற்கான அடையாளம் என்று சிலாகித்துக் கொண்டானர் மேலப்பக்கம் உள்ளவர்கள்.

பொழுது சாயும் போதும் பொழுது விடியும் போதும் மேலப் பாலக்கட்டையில் பத்து பேருக்கு குறையாமல் இருப்பார்கள். காலையில் இளவெட்டுகள் பலரும் மேலப்பாலக்கட்டையில் உட்கார்ந்துதான் பல் துலக்குவார்கள். அதில் உட்கார்ந்து பல் துலக்குவதென்பது கௌரவமாக கருதப்பட்டது.

காந்திநகர் பகுதி பாலத்தில் ஒன்றிரண்டுபேர் மட்டுமே எப்போதாவது இருப்பதுண்டு. பலரும் பஞ்சாலைக்கு வேலைக்குச் செல்பவர்களாக இருந்தனர். பகலிலும் இரவிலும் மாறிமாறி வேலைக்குச் செல்பவர்களாக இருந்ததால் பாலக் கட்டையை கடந்து தெருவுக்குள் வருவதோடு சரி. பிறகு அங்கு உட்கார்ந்து பேசிக்கொண்டு இருக்க வேண்டும் என்ற எண்ணமெல்லாம் இருந்ததில்லை. தெருவுக்குள் இருந்த வேல்வீரன்சாமி கோயிலின் திண்ணையில்தான் இவர்கள் அரட்டை அரங்கம் எப்போதாவது நடந்தேறும்.

மேலப்பாலக்கட்டையில் எப்போதும் திருவிழாக் கோலம்தான். பாலக்கட்டை கட்டி முடிக்கப்பட்ட நான்கைந்து நாளிலேயே முருகன் தனது பெயரை கல்லால் செதுக்கியிருந்தான். கள்ளிச் செடியில் இதயத்தை வரைந்து அதில் அம்பு வரைந்து தங்கள் பெயர்களின் முதல் எழுத்தை பதிவு செய்தவர்கள் எல்லோரும் தற்போது பாலக்கட்டையில் பதிவு செய்வதை பெருமையாக கருதினர்.

ஒருமுறை பாலக்கட்டையின் மேல் செல்வி என்று செதுக்கப்பட்டிருந்தது பெரும் கலவரத்தை ஏற்படுத்த இருந்தது. மேலப்பக்கம் வடக்குத்தெரு குமரேசன் மகள்தான் செல்வி. ''மேலப்பக்கம் உள்ளவங்க எல்லாரும் தாயாபுள்ளயா பழகிக்கிட்டு இருக்கோம். நமக்குள்ள வம்புதும்பு வந்துரக்கூடாதுனு பாக்குறேன். எங்க சாதிக்காரகளுக்கும் ரோசமும் இருக்கு.வீரமும் இருக்கு.... 'குமரேசன் கொதித்த போது அங்கிருந்தவர்களில் ஒருவர் 'ஏம்பா அந்த தெருக்காரங்களத்தான் நாம ஆகாதுனு ஒதுங்கி இருக்கோம். நமக்குள்ள எதுக்கு சச்சரவு வச்சிக்கிட்டு. அந்தக் கருமத்தயெல்லாம் சிமெண்ட்ட வச்சு பூசித் தொலஞ்சுருவோம்....' சொன்னபோது பிரச்சினை முடிவுக்கு வந்தது.

பாலம் கட்டியபிறகுதான் பலரும் வண்டிகள் வாங்கத் தொடங்கியிருந்தனர். வண்டிகள் வாங்குவதற்கு முன் பதினாறு எண் பெயர் கொண்ட அரசு பேருந்துதான் இவர்களின் சொகுசு வாகனம். இப்போதும் அந்த ஒரு பேருந்துதான் காலையும் மாலையும் வந்து செல்கிறது.

ஒருமுறை கருப்பனும் அவர் மகனும் அந்தப் பேருந்தில் ஏற ஒரு இடம் மட்டுமே உட்கார இருந்தது. அதில் ஆறாம்வகுப்பு படிக்கும் அவர் மகன் உட்கார்ந்து கொண்டான்.

அவர்கள் பின்னால் ஏறிய மேலப்பக்கம் பொன்னையா ''ஏன்டா கருப்பா... ஒனக்கு எவ்ளோ நெஞ்சழுத்தம் இருந்தா... நா ஏறுறது தெரிஞ்சும் ஓம் மவன ஒக்கார வப்ப... தனியா சம்பாதிக்கிறீங்கனு துமரு வச்சுப் போச்சு. அந்தப் பஞ்சு மில்ல இழுத்து மூடுனா சோத்துக்கு அய்யா... நொய்யானு அப்பறம் எங்ககிட்டதானே வரனும்...” சொல்லிக்கொண்டே அவனை இழுத்துவிட்டு உட்கார்ந்து கொண்டார்.

''நாங்களும் டிக்கெட்டுக்கு பணம் கொடுத்துதானே போறோம் ஓசிலயா போறோம்...” என்று சொல்ல நினைத்தாலும் அவரால் வாய் திறந்து சொல்ல முடியவில்லை. அவர் முன்னால் சுப்பனின் சாவுதான் கண்முன் வந்து சென்றது.

பன்னிரெண்டு வருடங்களுக்கு முன் நடந்த ஊராட்சி மன்றத் தேர்தலில் வார்டு உறுப்பினருக்கு சுப்பன் போட்டியிட்டார். போட்டியின்றி தேர்ந்

தெடுக்கப்பட்ட சுப்பன்தான் துணைத்தலைவர் என்ற நிலை இருந்தது. வாக்கு எண்ணிக்கை முடிக்கப்பட்ட இரண்டொரு நாளில் அந்தப் பேருந்தில் சென்றபோதுதான் சுப்பன் கழுத்தறுக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.


அனைத்து கட்சி தலைவர்களும் அந்த ஊரில் முகாமிட்டு பிரச்சினைக்கு தீர்வு காண முயன்றபோதும் அமைதி நிலவவில்லை. காந்தி நகர் மக்கள் பதவிக்கு வரக் கூடாது என்பதில் மேலப்பக்கம் உள்ளவர்கள் தெளிவாக இருந்தனர். அன்றிலிருந்து தேர்தல் வரும்போதெல்லாம் அங்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டாலும் காந்திநகர் பகுதி வார்டு உறுப்பினருக்கு யாரும் போட்டியிட வருவதேயில்லை. பலரின் வற்புறுத்தலுக்குப்பிறகு மலையப்பன் போட்டியிட்டாலும் சிலதினங்களில் மனுவை திரும்பப் பெற்றுக்கொண்டார்.

இந்தப் பிரச்சினைக்குப் பிறகு அந்த ஊர் பதட்டம் நிறைந்த பகுதியாக அறிவிக்கப்பட்டது. பஞ்சாலை திறந்ததும் மேலப்பக்கம் உள்ளவர்களின் வயல்களுக்கு காந்திநகர் மக்கள் வேலை பார்க்க வராதது பெரும் கோபத்தை

# காற்றினில் வரும் கீதமே

காற்றினிலே வருகின்ற கீதம் கேட்போம்
கானங்கள் மிதந்துவர சுவைத்துப் பார்ப்போம்
ஏற்றமிகு வாழ்வினிலே இசையும் உண்டு
எத்திக்கும் செவிதனிலே ஒலிக்கக் கேட்போம்
சீற்றங்கள் வந்திடுனும் இன்னல் இன்றிச்
சினத்தையுமே மாற்றிவிடும் கீதம் காற்றில் .
சேற்றினிலே நிற்கின்ற போதில் கூட
செப்புகின்ற பாடல்கள் மனத்தை நாடும் !

கீதங்கள் கேட்டாலே மயங்கி நிற்போம்
கிள்ளைமொழி பேசினாலே கீத மன்றோ
வேதங்கள் அத்தனையும் ஓதி வைக்க
வேட்கையுடன் காற்றினிலே செவியில் பாயும் .
சாதகங்கள் செய்திடுவோம் கீதம் பாட
சாட்சியமாய் கண்ணனவன் குழலின் கீதம்
பாதகங்கள் செய்பவரைக் கண்டால் கூட
பக்திநெறிப் பற்றிடுமே காற்றின் கீதம் !!



– சரஸ்வதி பாஸ்கரன்

உண்டாக்கியது. தம்மிடம் அண்டிப்பிழைக்காமல் வெளியில் வேலைக்கு செல்வது பலகாலமாக அவர்களுக்கு உறுத்தலாகவே இருந்தது.

இரண்டு மூன்று முறை பஞ்சுகளுக்கு தீ வைப்பு நிகழ்வுகள் நடந்தும் இழுத்து மூடும் நிலைக்கு வந்த போதும் அறப்போராட்டங்களால் ஆலை தக்கவைக்கப்பட்டது.

அன்றொருநாள் காந்திநகர் பாலத்தில் உட்கார்ந்து சிலர் பல் துலக்கிக்கொண்டு இருந்தனர். அதன் வழியே சென்ற மேலப்பக்கம் உள்ளவர்கள் சிலர் முறைத்துப் பார்த்துக்கொண்டு சென்றனர்.

'ஒங்க பாலமாச்சும் கட்டுன மேனிக்கு நல்லா இருக்குதுப்பா... எங்கப் பக்கம் உள்ள பாலத்தப்பாரு... எல்லாம் வானரத்துக்குப் பொறந்ததுக சொரண்டி சிரண்டி தின்னுருச்சுக...' என்று சொல்லிக்கொண்டே சென்றார் நாகப்பன்.

அன்று இரவு காந்திநகர் பாலத்தில் பெரும் சத்தம் கேட்டு ஓடி வந்தனர். எல்லோரும் ஓடி வருவதற்குள் அந்த ஜேஜிபி வண்டி நீண்ட தூரம் சென்றிருந்தது. பொதுமக்கள் வண்டியை மடக்கிப் பிடித்தாலும் பயனில்லாமல் போய்விட்டது.

காந்திநகர்க்காரர்களே பாலத்தின் ஒரு கட்டையை உடைத்து தள்ளிவிட்டு எங்கள்மீது பழி போடுகிறார்கள் என்றும் நீண்ட காலமாகவே எங்களிடம் வம்பிழுக்க அலைகிறார்கள் என்றும் திரித்து பேச ஆரம்பித்தார்கள் மேலப்பக்கம் உள்ளவர்கள்.

"நேத்து காலயில கூட நாங்க அந்த வழியா வரும்போது... சீக்கிரமா இந்த பாலக்கட்டைய நாங்களே ஒடச்சுப்புட்டு ஒங்க மேல கேசப் போடப்போறோம்னு மிரட்டுனானுக. நாங்க வன்கொடும சட்டத்துல கேச கொடுத்தம்னா நீங்க தப்பிக்கவே முடியாதுனு அவனுக சொன்னப்ப.. நாகப்பன் பெரியப்பாதான் சண்ட சல்லு போட்டுக்காதீகப்பானு சொன்னுச்சு. அதுக்கே அவனுக பெரிய மனுசனு பாக்காம வாய்க்கி வந்தபடி பேச ஆரம்பிச்சுட்டானுக... நாலு காசு கையில வந்ததும் ஆடுறானுக..." என்று ஒருவன் சொல்ல இன்ஸ்பெக்டர் செந்தில்வேல் தனது பார்வையை காந்திநகர் மக்கள் பக்கமாக திருப்பினார்.

"ஒங்களுக்கு ஆதாயமா சட்டம் இருக்குனா என்னவேணாலும் பண்ணுவீகளா... அந்தச் சட்டத்த தூக்குனாதான் நீங்கள்லாம் அடங்குவீங்க..." இன்ஸ்பெக்டர் சொன்னபோது முத்துக்குமரன் குறுக்கிட்டார்.

"சார் ஒருபக்கமா பேசாதீங்க.. அந்த ஊருக்கு ரெண்டு பாலம் வந்ததே இவங்கனாலதான்... அவுகளுக்கு தொண்டூழியம் பாக்க வரலனு அவுக கோவத்துல இப்புடி மிரட்டிப் பாக்குறாக.. நீங்க பொது மனுசன் அவுகளுக்கு ஏத்துக்கிட்டு பேசுறீக..." முத்துக்குமரன் சொல்லிக்கொண்டு இருக்கும்போது வட்டாட்சியரும் மாவட்ட துணை ஆட்சியரும் வந்து சேர்ந்தனர்.

இரு தரப்பினரிடமும் அமைதிப் பேச்சு வார்த்தை நடத்தி எழுதி வாங்கிக்கொண்டு பிரச்சினைக்கு முற்றுப்புள்ளிவைத்தனர். ஒன்றியக் கவுன்சிலர் நிதியிலிருந்து உடைந்த பாலத்தை சீரமைப்பு செய்ய உறுதியளிக்கப்பட்டது.

"எந்த வம்புதும்புக்கும் போகாம எங்க சோலிய பாத்துக்கிட்டு இருந்தாலும் ஒரண்ட இழுக்குறதே வேலயா இருந்தா நாங்க எங்க போயிங்க சாகுறது... நாங்களும் தலநிமிந்து வாழனும்னா அவுக எங்கபக்கம் தலகாட்டாம இருந்தாலே போதுமுங்க... ஒரு எடஞ்சலும் வராது..." இராமன் சொல்லும்போது அவர் மனைவி குறுக்கிட்டாள். "இத்தனை ஆபிசருகளும் அவுக அவுக சோலிய பாக்க கௌம்பிருவாக. நால பின்ன நாம அந்த பாதயில போறதா இல்லயா.. சுப்ப மாமா கத தெரியும்ல... நமக்கு எதுக்குய்யா ஊர் வம்பு..." வள்ளி சொல்லிக்கொண்டே தனது முந்தானையில் கண்ணீரை துடைத்துக் கொண்டாள்.

இப்போது மேலப்பாலக்கட்டை அருகில் டீக்கடை ஒன்றும் முளைத்துவிட்டது. காலையும் மாலையும் மேலப்பாலக்கட்டை டீக்கடையில் கூட்டம் நிரம்பி வழிந்தது. காந்திநகர் மக்கள் யாரும் அங்கு செல்வது இல்லை. "மாணிக்கம்... வாப்பா... எல்லாரும் வரனும்னுதான் கட வச்சேன் ஒங்க தெருப்பக்கருந்து ஒருத்தளும் வர மாட்றீக... ஊருவிட்டு ஊருவந்து கட

வச்ச நா நட்டத்துலயா போறது..."டீக்கடை முத்துராமன் செட்டியார் சொன்னபோது கையெடுத்து கும்பிட்டவாறு எதுவும் பேசாமல் போய்க்கொண்டிருந்தார் மாணிக்கம்.

பக்கத்து ஊரில் டாஸ்மார்க் கடை வந்ததிலிருந்து மேலப் பாலக்கட்டையில் இரவுநேர கச்சேரி வெகுசிறப்பாக நடக்க ஆரம்பித்தது. குடித்துவிட்டு பாட்டில்களை அங்கேயே உடைத்துவிட்டு செல்வதென்பது மிகச் சாதாரணமாகிவிட்டது.

தினமும் காலையில் ஊராட்சியில் வேலை பார்க்கும் சிலம்பனுக்கு இதைக் கூட்டிப் பெருக்குவதுதான் முதல் வேலையாக இருந்தது. பழையபடி பாலக்கட்டையில் பெயரைச் செதுக்கும் பணிகளும் மும்முரமாக இருந்தன. பாலக்கட்டையின் கீழ் ஏராளமான கான்ஸ் பாக்கெட்டுகள் காலியாகி கிடந்தன. டீக்கடையில் டீ விற்பனையைவிட காண்ஸ் பொட்டலங்களின் விற்பனையான் வெளுத்து வாங்கியது.


மூன்று கொடிக்கம்பங்கள் இருந்த இடத்தில் இப்போது ஏழெட்டு கட்சி கம்பங்கள் நடப்பட்டு விட்டன. அவரவர் போக்கில் பிரச்சினை இல்லாமல் போய்க்கொண்டு இருந்தபோதுதான் அந்த நிகழ்வு நடந்தது.

அன்றொருநாள் மாலை நேரம், பாலக்கட்டையின் எதிரே இருந்த காட்டுப்பக்கத்திலிருந்து ஆட்டுக் குட்டிகளை ஓட்டிவந்த முருகேசன் எதிர்பாராத விதமாக முள்ளில் மிதிக்க அவனது காலை முள் பதம்பார்த்துவிட்டது. ஆடுகளை வீட்டுப்பக்கம் பத்திவிட்டுவிட்டு அந்தப் பாலக்கட்டையில் வலது காலை தரையில் ஊன்றி இடது காலை வலது காலில் போட்டு தனது இடுப்பில் தொங்கிக் கொண்டிருந்த முள்புடுங்கியால் முள்ளை எடுக்க ஆரம்பித்தார்.

"இவனுகள இப்புடியே வளர விட்டோம் நம்மல ஊர்ல வைக்க மாட்டானுக. எவ்வளவு துணிச்சல் இருந்தா ஆடுகள பத்திவிட்டுட்டு வேணும்னே மூக்கன் மயன் காலுமேல கால் போட்டு ஒக்காந்துகிட்டு இருப்பான். நம்மல பாக்காதது மாறி காட்டிக்கத்தான் அந்தப்பக்கமா திரும்பி ஒக்காந்துருக்கான். அந்தச் செவப்புச் சட்டக்காரன் வேற வெளியூரு போயிருக்கானாம். யார்யாரோ கட்சிக்காரனுக புதுசு புதுசா

# பிரக்ஞை

சப்தங்கள் வெளியேறிய
மௌனச்சூழலில்
விழிப்பின் கரையில்
அமர்ந்திருந்த என்னை
பதமாய் உள்ளிழுத்தது
உறக்கத்தின் நீர் நிலை.
சாதகமான தருணத்தில்
மேற்பரப்பை
முழுதும் போர்த்தியது
கனவின் பாசி.
அதனூடே
சவ்வின் துருவல்கள் போல்
இறங்கின காட்சிகள்
உணர் நிலையின்
கூர்மையை
மழுங்கடித்தபடி.
வசீகரத்துடன்
சிரித்தழைத்த
மரிப்பின் குகை வாயிலை
நண்ணுகையில்
கொத்திக்கவ்வி
பதறியபடி
தூக்கியதென்னை
பிரக்ஞையின் பெருங்கொக்கி....



- தானப்ரியன்
சென்னை.

வந்துட்டுப் போகவும் குளுரு விட்டுப்போச்சு. இந்த எலவுக்குத்தான் அந்த நாள்ல இருந்து பாலம் கட்டாம போட்டது. நம்ம சாதிக்கார ஆளுங்க எல்லாம் இருந்தும் கோட்டைவிட்டுட்டோம். போயி ஆட்ற அவனோட கால வெட்டுங்கடா...” எழுபது வயது நிரம்பிய பெரியதம்பி தனது மீசையை தடவுக்கொண்டு சொல்லும்போதே ஒருவன் புலியென பாய்ந்து சென்று முருகேசனின் இடது காலை ஒரே துண்டாக வெட்டினான். வலியால் துடித்து கத்தினான் முருகேசன். வேகவேகமாக டீக்கடையை மூடிவிட்டு தனது இருசக்கர வண்டியில் சென்று கொண்டிருந்தார் முத்துராமன் செட்டியார்.

மேலப்பாலக்கட்டையில் இருந்த கட்சிக் கொடி மரங்கள் உற்சாகமாக காற்றில் ஆடிக்கொண்டு இருந்தன. ஆனால் அங்கு யாரும் இல்லை. மிகச் சரியான நேரத்துக்கு வந்த ஆம்புலன்ஸில் முருகேசனை ஏற்றிக்கொண்டு அரசு மருத்துவ மனைக்கு சிலர் சென்றனர்.

அன்று இரவே நூற்று நாற்பத்துநான்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நூற்றுக்கணக்கான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். விடிற்காலையில் அமைதி பேச்சு வார்த்தை நடத்த வட்டாட்சியரும் மாவட்ட துணை ஆட்சியரும் அங்கேயே முகாமிட்டிருந்தனர்.

திடீரென்று அந்த இரவில் வேல்வீரன் சாமி சன்னதியில் கூடிய காந்திநகர் இளைஞர்கள் எதுவும் பேசாமல் கண் இமைக்கும் நேரத்தில் கலைந்து சென்றனர்.

சாமக்கோழி கூவத் தொடங்கியது. மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு காரிருள் ஊரையே ஒரே துப்பட்டியால் போர்த்திக்கொண்டு இருந்தது. ஒரு சொடக்கு போடும் நேரத்திற்குள் மேலப்பக்கம் இருந்த வீடுகளும் வைக்கோல் போர்களும் கொழுந்து விட்டு எரியத் தொடங்கின. மக்கள் வெளியில் ஓடி வந்து அலறிக்கொண்டு இருந்தனர். போலிசார் அர்த்த ராத்திரியில் செய்வதறியாது விழித்துக்கொண்டிருந்தனர். எந்த சலனமும் இல்லாமல் காந்திநகர் மக்கள் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தனர்.

---

# ஹைக்கூ

நீர் வற்றிய ஆறு
உழவனின்
வயிறு

வழிதோறும்
முள் மரம்
வாழ்க்கைச் சக்கரம்

கறுது அறுத்த கத்தி
விவசாயி கழுத்தில்
இயற்கை

சிந்திய வேர்வை
உழைப்பின் தினம்
உயிர்

சிலந்தி வலை
நூலும் வாசிப்பும்
எண்ணம்

தூரத்தைக் காட்டும்
மைல் கல்
உள்மனசு

உன் எழுத்து
என் செயல்
இறைவன்

உணவகங்கள்
மணம்
பணப் பசி.

**ஜவ்வாது முஸ்தபா**

# சாமானியன் பார்வையில் போராட்டம்...

ரத்தத்தின் சுவடு
கிழிந்த பலகை
கூச்சலுக்கு பின்
மவுனம்!
இவை யாவும் நினைவு ஊட்டும்
போரட்ட நிகழ்வுகளை...

இவை மட்டுமா?
இல்லை இல்லை !
இன்னும் இருக்கு ஆயிரம் போராட்டங்கள்.

இரு அனு சந்தித்து
அமைதியாய்
அன்பாய் இணைந்து,
தன் திருமணத்துக்கு
சாதி ஒழிப்பு மலர் வெளியிட்டவனாய்
நான் பிறந்தது
ஒரு போராட்டம்.

மூட்டை தூக்கும் கூலியாளனின்
மூளைச் சோகங்களை உணர
காய்கறிகளை சுமக்காமல்
காய்யாய் உள்ள அறிவு கனியாக
புத்தகங்களை சுமந்த
பள்ளி வாழ்க்கை
ஒரு போராட்டம்...

மழைக்குகூட கல்வி கூடங்கள்
அருகில் அமராதவர் என் தந்தை
ஆனால்,
மழைக்காக கல்வி புத்தகங்களை
தலையில் அமர வைத்து
படித்த கல்லூரி தினங்கள்
ஒரு போராட்டம்...

சோறும் என் தொண்டையில்
சிக்கி
வெட்டியாய் இருக்கிறாய்
என திட்டி சென்ற
வேலை தேடிய நொடிகள்
ஒரு போராட்டம்...

என் மனம் நிகழ்த்திய
அழகி போட்டி தேர்வில்
என் அதிர்ஷ்ட்ட இலட்சுமியுடம்
நடந்த திருமணம்
ஒரு போராட்டம்...

என்னைக் கண்டு
ஊரே அழுகையில
நான் மட்டும் நிகழ்காலைத்தை விட்டு விட்டு,
இறந்த காலத்தையும்
எதிர் காலத்தையும்
நினைத்து நினைத்து
கொல்லி வச்ச
தகப்பனின் மரணம்
ஒரு போராட்டம்...

எல்லாம் முடிஞ்ச பின்பும்,

அடகு கடை சேட்டின் நோட்டிஸ்,
கந்து வட்டிக்காரனின் கொலை மிரட்டல்,
வங்கியில் கட்டச் சொன்ன வட்டி
என தொடரும் போராட்டம்...

எல்லாம் ஏன் என்றேன்?
உனக்காக வாங்கினார் என்றனர்

போர்க்களமாய் மாறிய வாழ்க்கைகளம்.

மீண்டும் தத்ரூபமாய் போராட்டம் போல்...
ரத்த சுவடாய் கடன் கணக்குகள்
கிழிந்த பலகையாய் வீட்டு பத்திரம் என
தொடரும் போராட்டம்.

கூச்சலுக்கு பின் மவுனம் எப்போ???
அது என் மரணம்
அதுவே என் இறுதி போராட்டம்!!!!...

– வீ.ர.சுஜித்ரா,
செஞ்சி.



# அர்த்தமுள்ளது வாழ்க்கை



- இசைவாசி சிவராஜ்

வாழ்க்கை பலருக்கு போராட்டமான ஒன்று. அதே வாழ்க்கைதான் பலருக்கு மிகுந்த மகிழ்வை தரும் ஒன்றாகவும் இருக்கிறது. அவரவர் கண்ணோட்டத்தை வைத்தே அவரவரின் வாழ்வு மதிப்பீடு செய்யப்பட்டு அளக்கப்படுகிறது என்றால் அது மிகை இல்லை என்றே சொல்லி விடலாம். இந்த வாழ்க்கை அப்படி என்ன பெரிதாக நமக்கு போதித்து விடுகிறது? என்கிற கேள்விகளுக்கு அது மிகப் பெரிய உண்மையை மனித குலத்திற்கு இயம்பி ஒரு நிலையாமை தத்துவத்தை விளக்குகிறது என்று பதில் அளிக்கலாம்.

அவனுக்கு என்ன நல்லா வாழ்றான். பொறந்தா அரசியல்வாதியாக பொறக்கனும். நினைச்சது எல்லாம் அனுபவிக்கலாம். அவனுக்கு என்ன அவன் தாத்தா சொத்துல வாழ்றான் என்று எத்தனை எத்தனை வெறுப்புணர்வு அடுத்தவரின் இன்பமான வாழ்க்கையை நினைத்து. மனிதனுடைய சந்தோசம் கெடுவது எதனால் என்கிற ஆய்வு சொல்கிறது “மற்றவர்கள் எப்படி வாழ்கிறார்கள் நாம் இப்படி வாழ்கிறோமே” என்கிற எதற்கும் உதவாத நினைப்பு தான் காரணம். நம் வாழ்வை மேம்படுத்தும் பொறுப்பு நமக்கு அதிகமாகவே இருப்பதை உணர வேண்டும். நமக்கு இணக்கமாக யாரோ ஒருவர் தான் வருவார்கள். அடுத்தவர்களால் நம்முடைய வாழ்க்கை வளர்ச்சிக்கு போகாது. நாம் தான் அதை பசுமையாக்கி செழுமையாக்க வேண்டும்

நல்ல விஷயத்தை தேடினால் நல்லது வாய்க்கும் என்பது சத்தியம். தேடுவது தான் தேவையாகிறது. வாழ்க்கைய பிரகாசமாக்கும் தேவையை அதிகப்படுத்தலாம். தூசுகளை வடிக்கட்டுவதை போல தேவையில்லாத காரியத்தை உங்களை காயப்படுத்துகிற செயலை உங்கள் உள்ளத்தை கெடுக்கிற அற்பங்களை வடிக்கட்ட பழக வேண்டும். முகம் சுழிக்கும் நிகழ்வை நாம் ரசிப்பதில்லை. நம் வாழ்வு நம்மை பார்த்து முகம் சுழிக்கும் படி நடந்து கொள்ள வேண்டாம். உங்களை நினைத்து உங்கள் உன்னதமான காரியங்களை நீங்கள் எப்போது பெருமை படுகிறீர்களோ அப்போது தான் நீங்கள்



## காதல் வாழ்க..!!

**சில நிமிடங்கள்**
**யுகயுகங்களாய் கடக்கின்றன..**
**கனவில் ஏதோ பிதற்றுகின்றாய்**
**உயிரைப் பிழியும் கணங்களாய்..**
**தேடுகின்றாயெனை..**

**நிலவின் குளிர்ச்சியும்**
**தீப்பிழம்பென சுட..**
**காணாத ஓிரவை காலை வரை**
**தீர்ப்பது எப்படியோ..?!**
**ஆழிப்பேரலையாய்**
**மனமது போராட.. தாளாமல் தவித்து**
**பஞ்சணையை அணைத்து..**

**பற்றி எரியும் நெருப்பில்..**
**நித்தம் தீக்குளிக்கின்றாய்..**
**தணியாத தாகத்தின் பயனாய்**
**தொடருமுனது கேள்விக் கணைகள்..**

**சொல்லவா..எங்கே சென்றேனென்று?!**
**உன் இதயத்தை ஆழமாக**
**தோண்டிக் கொண்டிருக்கிறேன்..**
**குருதிப் புனலின் வெதுவெதுப்பும் ..**
**எலும்பும்.. சதையும்.. நரம்புகளும்..**

**வேகமாக லப் டப் அடிக்கும் எந்திரமதை**
**தாண்டி உன்னுள் போய்க்**
**கொண்டேயிருக்கிறேன் பிரமித்து..**
**ஒவ்வொரு அணுக்களிலும்**
**என்னை வைத்திருக்கிறாய் சேமித்து..**

**உயிர் வேர் வரை..**
**உன்னில் நான்.. என்னில் நீ..**
**காதல் வாழ்க..!!**

**சாரதா க. சந்தோஷ்**
*ஐதராபாத்*

வாழ்ந்திருக்கிறீர்கள் என்று அர்த்தம் ஆகும்.

பதவிகளால் வருகிற ஆணவம் மோசமான வாழ்க்கையை கற்றுக் கொடுத்து விடும். சக மனிதனை தன்னை போலவே நேசித்த மாபெரும் ஞானி வள்ளலார் பணிவுக்கும் நேசிப்புக்கும் நமக்கு உதாரணமாக திகழ்கிறார். நம்மை பார்த்து உண்மையான புன்னகையோடு மற்றவர்கள் அணுகி பழக வேண்டும். கோபத்தாபங்கள் கடந்து வாழ்வை கடந்து அன்பை மதிப்பை அடுத்தவர்களுக்கு கொடுத்து விட்டு செல்ல தவற கூடாது. அது தானே அழகான வாழ்க்கையை நமக்கு கொடுக்கும்.

“ஐயா நான் எதாவது சாதிக்கனும் எப்டின்னு சொல்லுங்கய்யா” என்று கேட்ட மாணவியிடம் என்ன சொல்வதென்றே புரியாமல் இது வரையில் அந்த கேள்விக்கு பதில் சொல்லாமலே இருக்கிறேன். ஏனெனில் நான் இன்னும் சாதிக்க ஆரம்பிக்கவே இல்லை. ஆனால் ஒன்று மட்டும் அவளிடம் சொல்ல தோன்றுகிறது. பிறர்க்கு முன்னுதாரணமாக வாழ்ந்து விடும் அந்த நல்ல வாழ்க்கை தான் சாதனை வாழ்க்கையாக இருக்கும் என்று தோன்றுகிறது. வெற்றிகளை குவிப்பது மட்டுமே சாதனை இல்லை. நம் அருகில் உள்ளவர்களுக்கு நல்ல வாழ்க்கையை பெற்று தருதலும் நல்ல பிறவிக்கு உதாரணம் தானே?

மனசார வாழ்த்தி மனமார மன்னித்து மனப்பொய் இல்லாமல் மகிழ்வோடு அணுகுவது தான் சிறப்பு. நெற்று என் நண்பன் வந்தான் ச்சே... என்ன கொடுமையான வாழ்க்கை. அவனவன் பிழைக்கிறதுக்கு நாம கஷ்டப்பட்டு உழைக்கிறோம் ஒழுங்கா சம்பளம் கூட கிடைப்பது இல்லை எப்படி வாழ்வது என்று புலம்பி தள்ளி தன் கோவத்தை கொட்டி தீர்த்து விட்டான். இந்த சூழ்நிலையில் அவனிடத்தில் போய் இன்பமாய் இரு எல்லாதையும் தாங்கித்தான் ஆக வேண்டும் என்றெல்லாம் அறிவுரை வழங்கினால் கண்டிப்பாக கோபத்தால் என்னை வாட்டி எடுத்து விடுவான். “நமக்கும் கீழே இருப்பவர் கோடி” என்று கண்ணதாசன் பகர்வதைப் போல நமக்கு கிடைத்த இந்த சூழலை ஏற்று கொண்டுதான் ஆக வேண்டும். வேட்டைக்குச் செல்லும் விலங்குக்கு சில நேரங்களில் பட்டினி கிடக்க வேண்டி வரும். வெற்றி அடைய போகிறவன் சில நேரங்களில் வெறுப்படையாமல் கடந்து போகத்தான்

வேண்டும். பாரம் சுமைக்கும் உடம்பு உறுதியோடு இருக்கும் என்பதனை மறந்து விட வேண்டாம்.

காரல்மார்க்ஸ் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு வறுமையிலும் பஞ்சத்திலும் அடிபட்டு காதலியிடம் கூட இன்பமாக வாழ முடியாத போதும் ஒரு யுகப்புரட்சியை அவனால் ஏற்படுத்த முடிந்தது. படிக்காத பாமரனாக இருந்து தன் நடிப்பால் அறிவார்ந்த பகுத்தறிவை வெளிப்படுத்தி திரைத்துறையில் நீங்காத இடம் பிடித்த எம்.ஆர்.ராதா. திரை ரசிகர்களை நல்வழிப்படுத்த ஒரு காரணமாக இருந்தார். கால் ஆயுளோடு தன் வாழ்வை முடித்து கொண்ட மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணச்சுந்தரம் மாபெரும் சிந்தனையை சமூகத்திற்கு விதைத்து சென்றார். எத்தனையோ சாதனையாளர்கள் தன் வாழ்வை வாழ முடியாத சூழலிலும் வாழ்ந்து காட்டினார்கள். அவர்களுக்கு அமைந்த அதே பிறவி தான் நம் எல்லோருக்கும் வாய்த்திருக்கிறது. “யார்க்கும் இந்நிலை பொதுவன்றோ” என்று பாரதி சொல்வதை போல எல்லோருக்கும் வாழ்க்கை ஒன்று தான். அதை வாழ்வதும் வாழ்ந்து காட்டுவதும் நமது நடத்தையிலே இருக்கிறது. உங்கள் நம்பிக்கையின் அளவை பொறுத்தே வாழ்வின் அளவு இருக்கும்.

நம்பிக்கை நிறைந்தவர்கள் நடத்தையிலும் பாவனையிலும் பேச்சிலும் அழகாக தெரிவார்கள். நம்பிக்கையால் ஒப்பனை செய்து கொள்ளுங்கள் உங்களை. நம்பிக்கை தாழ்நிலை வாழ்க்கையை உயர்நிலையாக மாற்றும் வல்லமை படைத்தது. வலிமையான மனதை எந்த தருணத்திலும் கை விட்டு விடாதீர்கள். தினம் தினம் செய்படுங்கள். செயல்படாத நாள் உங்களுக்கு நரகம். ஒன்றை நோக்கி பயணிக்கும் போது பாதியிலேயே திரும்பி விட வேண்டாம். நீங்கள் திரும்பிய இடத்தில் கூட வெற்றி இருந்திருக்கலாம்.

அர்த்தமுள்ளது வாழ்க்கை
உங்கள் அளவை அதிகரியுங்கள்

இந்த வாழ்வை கடந்து விடுவோம் என்கிற எளிய சூத்திரம் தான் மனித இனத்தையே வலிமைப்படுத்தி அரை வினாடி கூட வாழ்வை பற்றி நினைக்க விடாமல் வைக்கும் ஒரு மாய விளையாட்டு தான் இந்த வாழ்க்கை. மனிதனுக்கும்

## கைத்தறி மேடை காலியாகி இருக்கிறது மதுப்புட்டி.

*பானால். சாயிராம்.*

மனிதனுக்குமான வேறுபாடுகள் உண்டு. அது எந்த அடையாளத்தை வைத்து வருகிறது? என்கிற கேள்வி தான் ஒருவனை இன்னொருவனை விடவும் மேம்படுத்தி அல்லது தாழ்வுபடுத்தி காட்டுகிறது. அவரவருக்கான ஓர் அடையாளம் நிச்சயம் கை ரேகையைப் போல இருக்கும். அந்த அடையாளமே ஒருவன் எப்படி வாழ்கிறான் அல்லது வாழ்ந்தான் என்கிற அளவுகோலாகிறது.

உங்கள்
அகம் தீர்மானிப்பதே
உங்கள் அடையாளம்

”இந்த காலத்துல ஏன் டா தமிழ் படிக்கிற? சொன்னா கேளு பிசிஏ படி நல்ல எதிர்காலம் இருக்கு” “தமிழ் படிச்சி என்ன பண்ண போற? நல்ல வேலை கிடைக்காது. கிடைத்தாலும் நல்ல சம்பளம் கிடைக்காது” தமிழ் பயில்பவர்களுக்கு அது போன்ற அவநம்பிக்கை பேச்சு கண்டிப்பாக கிடைத்திருக்கும். நான் மட்டும் என்ன விதி விலக்கா? எனக்கும் கிடைத்தது. தமிழ் படித்தேன் எதிர்காலம் இருந்தது. நல்ல வேலை மட்டும் இல்லை நல்ல மனத்திருப்தியும் கிடைத்தது. சம்பளம் மட்டும் இல்லை நல்ல மனிதர்களும் கிடைத்தார்கள். மாணவர்களை வழி நடத்தும் பெருமையும் கிடைத்தது. எல்லாம் தமிழ் மயம்.

நாம் அங்கீகாரம் ஆகும் வரை பல்வேறு அவமானங்கள் வந்தே தீரும். அதன் பிறகு நமக்கு கிடைக்கிற மரியாதை வெற்றி எல்லாம் அந்த அவமானங்கள் மேல் சிம்மாசனம் போட்டு நிற்கும். வாழ்தல் எளிது

அடையுங்கள் லட்சியத்தை
வாழ்க்கை அர்த்தமுள்ளது

# நீயே சொல்லிவிடு

இதயத்தை
திருடிக்கொண்டு
வெளிநாட்டில்
வாழும் என் பிரியமுள்ள
புருஷனுக்கு?

தினந்தோறும்
தொலைபேசியில்
நீ தரும்
முத்தங்கள்
சலித்து விட்டன!

அடிக்கடி
கனவில் வரும் நீ
வாங்கித்தரும்
மல்லிகை பூக்கள்
வாசமிழந்து
கிடக்கின்றன?

நடுநிசியில்
விழித்துக்கொள்ளும்
என் ஈரமற்ற உதட்டை
உன் கனவு முத்தங்கள்
வேட்டையாடுகின்றன??

ஆன்லைனில்
நீ அனுப்பி கொடுத்த
அமெரிக்க டாலரில்
உன் வேர்வையின்
பிசுபிசுப்பு??

அப்பாவை
கேட்டழும் உன் மகளுக்கு
நீ வாட்ஸப்பில்
பேசி அனுப்பிய
ஒலிப்பேழையை
மறுஒளிபரப்பு
செய்வதைத்தவிர
வேறுவழி
தெரியவில்லை??

பரணில் கிடக்கும்
தொட்டிலுக்கும்!
படுக்கையில் கிடக்கும்
கட்டிலுக்கும்!
என்ன பதில்
சொல்வதென்பதையும்
நீயே சொல்லிவிடு???

தமிழ்இலக்கியன்.

## அவன் இறக்கமற்றவன்...

அவன் இறக்கமற்றவன் தான்
அந்த ஒரு நொடிக்காக
இத்தனை நீண்ட காலமாக
காத்திருக்க வைத்தான்
அவன் இறக்கமற்றவன் தான்...

எல்லாவற்றிலும் என்னை
முந்தியிருக்க வேண்டுமென்றே
நினைப்பாவன்.

அவன் என் மீது
அன்பு செலுத்தும் போதும்
கோபபடும் போதும்
எந்த ஒரு பாகுபாடுமின்றி
அவன் என்னை ஒரு ஆணாக
நினைத்து செயல் படுவான்.

நான் அனைத்தையும்
பொருத்துக் கொண்டு தான் இருந்தேன்.
அந்த ஒரு நொடிக்காக...
ஆனால் அந்த ஒரு நொடியையும்
தனதாக்கி கொண்டு
மீண்டும்
அவன் இறக்கமற்றவன்
என்பதை நிரூபித்து விட்டான்.

அன்பு செலுத்துவதை போலவே
அந்த ஒரு நொடியில்
நிகழும் மரணத்தை
என் மடி மீது தலை வைத்தே
மரணத்தையும் தனதாக்கி கொண்டான்.
என் இறக்கமற்ற காதலன்..

மகிழ்ச்சி ஆ.ராம்குமார்

## எம் மழலையின் அழுகுரல்

தொட்டில் நெருங்கா
பருவத்தில்
கட்டிலில் சிதைக்கும்
அரக்கனே

சபலம் கொண்ட
கயவனே
முகமறியா
மழலைக்கு
தொடுதல் புரியுமா
இல்லை
பிறப்பிடம் தெரியுமா

காமவெறி கொண்ட
உன்னை
வெறி நீங்க
அறுத்தெறிய
வேண்டும்

அறுத்தெறிந்தாலும்
ஆராத காயம்
பச்சிளம் பூவின்
நெஞ்சில் பாயும்

தவழும் முன்னே
கவலையில் தத்தளிக்கும்
வாழ்க்கை

பயம் கொண்ட
வஞ்சகனின் முகமறியாது


முகமறியும் அனைவரையும்
வஞ்சகனாக பார்க்கும்
அவலம்

இச்சை செயலால்
மரணப்படுக்கையில்
நேரங்கள் கடத்துகிறது
பலரது குடும்பங்கள்

அறவே ஒழிக்க
பெண்ணே நீ
மீண்டெழுவாயாக.....

- கீர்த்தனா

# மடிக்கும் மனம்



நெருப்புவிழிகள் **ம.சக்திவேலாயுதம்**
நெல்லை.

அது என் அப்பாவின் பழக்கம் கிடையாது. ஆனாலும் என்னிடம் அது எப்படி அப்பிக் கொண்டது என்பது எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை அப்போது வேறேதும் இல்லாமல் இருப்பதும் கூட அதற்கான காரணமாக இருக்கலாமோ என்னவோ.. சரி.. சரி அது எதுவாக இருக்கும் என சிந்திக்கத் தொடங்கியிருப்பீர்கள் அப்படித்தானே.. ஆம் அன்று தொடங்கி இன்று வரை நான் எங்கு சென்றாலும் என் கைகளோடே பயணிக்கும் மஞ்சள் பையைத்தான் சொல்கிறேன்.

வெயில், மழை என எதுவாக இருந்தாலும் இப்போது குடையும் மஞ்சள் பையும் தான் எனது அடையாளம். இப்போது எனக்கு வயது 76. கைத்தடி தேவையில்லை..குடையும் மஞ்சள் பையும் போதும்.

தனிக்கட்டையாக வாழ்ந்துவரும் நான் விதவிதமாக மஞ்சள் துணிப்பைகளை சேர்ப்பதில் ஆர்வமிக்கவன்.

"யாருக்குமே பிடிக்காத மஞ்சள் பை உங்களுக்குள் மட்டும் எப்படி பிடிக்கிறது" என்ற உங்கள் கேள்வி எம்காதுகளுக்கு கேட்டுவிட்டது.

அப்போ எனக்கு 30 வயசிருக்கும். என் வீடு இருந்தது மீனாட்சிபுரம். நம்ம திருநெல்வேலி ஜங்சனிலிருந்து சுமார் 1.3கிமீ. ஊர் சிட்டி ரேஞ்சுக்குள் இருந்தாலும், தாமிரபரணி ஆறு, ரயில்வே கேட், வயற்காடுகள், ஆத்துப்பாலம் இப்படி என் ஊரின் அழகை சொல்லிக்கொண்டேப்போகலாம்.

அப்படி எல்லா அழகா இருக்கிற ஊரின் ஒரே ஒரு குறை பேருந்து மட்டும் எப்போதாவது என் ஊரை எட்டிப்பார்ப்பது மட்டும். அந்த பேருந்தும் ஜங்சனிலிருந்து டவுனுக்கு போகிற பேருந்து . எங்க ஊர் வழியா சி.என்.கிராமம், குறுக்குத்துறை, அருணகிரி தியேட்டர் வழியா டவுனை ரீச்சாகும். அந்த மாசம் என்ன நடந்ததுன்னு தெரியல.. ஒன்வே பேருந்து டூவே பேருந்தா ஓடிட்டு இருந்தது.

சிவபெருமான் பக்தனான நான் கல்லூர் சிவன் கோவிலுக்குப்போகிறதற்காக மீனாட்சிபுரம் பிள்ளையார் கோவில் ஸ்டாப்பில் காத்திருந்தேன். ஒழுங்காக ஓடிட்டு இருந்த பேருந்து அன்று வரவில்லை. சுமார் காலை 8மணி இருக்கும். சரி நடந்து ஜங்சன் பஸ்ஸ்டாண்ட் நடந்தே போயிருவோம் என சின்ன பெருமாள் கோவில், அங்குவிலாஸ் பில்டிங், பெரிய பெருமாள் கோவில், கடந்து சந்திர விலாஸ் ஹோட்டல் தாண்டி கால்கள் சாலைக்குமார சுவாமி கோவில் வழியேஜங்சனை அடைகிறது.

கல்லூர் சிவன் கோவிலுக்கு பேருந்தேறி செல்லக்காத்திருந்தேன். எண் 36 சேர்மாதேவி பேருந்து வருகிறது. பஸ்ஸடாண்டில் குழுமியிருந்த கூட்டம் ஒன்றை ஒன்று முண்டி அடித்துக்கொண்டு அந்த பஸ்ஸுக்குள் ஏறியது. அதில் நானும் ஒருவன். மஞ்சள்பையோடு ஏறிய எனக்கு கடைசி சீட் கிடைத்தது.

"சார் சுத்தமல்லி போகுமா? என்றொரு

■

தேவையறிந்துவிதைத்ததோ
கைத்தவறி விழுந்ததோ
பழத்தைத்தின்று வீசியதோ
பறவைகள் எச்சமிட்டதோ
எந்த விதையாகினும்
முளைவிட தேவை
வான்நீர்.

■

வேலையேதுமற்ற
ஆதவன்
கிழக்கினை வெளுத்து
காத்திருக்கிறான்.
என்னவள் கண்விழித்ததும்
அவளின்
பேரெழில்
காண்பதொன்றே
வேலையாய்.

**பாரியன்பன்**
குடியாத்தம்

# செல்வம்

இல்லையே என்பாரு முண்டு! நாட்டில்
இருந்துந்தான் எண்ணாரு முண்டு!
தொல்லையே இருப்பதனால் என்று சிலர்
சொல்லியேப் புலம்புவது முண்டு!

உள்ளதனை உள்ளபோது நன்று தன்
உள்ளத்தில் மதிக்காரு முண்டு!
கொள்ளையிலே கைவிட்டுப் போன பின்பு
குமுறுவதால் என்னபயன் உண்டு?

**கவிமாமணி சேலம்பாலன்**

குரல்..சார் அரியநாயகிபுரம் போகுமா?" இப்படி மக்கள் குரல் கேட்க "கண்டக்டர் சுத்தமல்லி ஊருக்குள்ள போகாது அரியநாயகிபுரம் போகாது" என படபடவென வெடித்தார். டிக்கட் கொடுக்க ஆரம்பித்தார்.

நான் கல்லூர் டிக்கட் கேட்டவுடன், "நடுக்கல்லூர் தானே இந்தாங்க" என டிக்கட் கிழித்து கொடுத்தார் கண்டக்டர்.

டபுள் விசிலடித்தபடி வண்டி கிளம்பியது. ஈரடுக்கு மேம்பாலம் வருவதற்குள் தூக்கத்தில் கண்கள் அசந்தது.

பேருந்து நகர்கிறது தூக்க கலக்கத்தில் கண்டக்டர் ஸ்டாப் சொல்லும் சப்தமும் விசிலும் கேட்டுக்கொண்டே இருந்தது.

ரோடா ஐயா இது என பேருந்துக்குள் இருக்கும் ஒவ்வொருவரும் அருகில் இருக்கும் ஒவ்வொருவரிடமும் தன் சமூக அக்கறை பேச்சுக்களை சப்தமாக பேசி வருவது எம் காதுகளுக்குள் அந்த அரைத்தூக்கத்திலும் விழுந்தது.

சுத்தமல்லி இறங்குங்க.. இறங்குங்க,என கண்டக்டர் சொன்னதும், சற்று விழிப்பானேன். சட்டென என் மணிக்கட்டில் உள்ள கைகடிகாரத்தை பார்க்கிறேன். பேருந்தேறி சுமார் 40 நிமிசமானது எனக்கு தெரிந்தது.

மூன்று ஸ்டாப் கழித்து கல்லூர்.விழித்தபடி இருந்தே இருந்தேன். பேருந்து வேகமாக சென்றது. கல்லூர் இறங்குங்க..இறங்குங்க..என கண்டக்டர் என்றதும் உடனே இறங்கினேன்.

பேருந்தில் இருந்து இறங்கியதும் கண்ணுக்கு புலப்பட்டது ராஜா பிள்ளை ஹோட்டல். ஓலைக் குடிசைக்கடை. அதுவே கல்லூரின் மிகப்பெரிய ஹோட்டலாக இருக்கக்கூடும் போல. வாசலில் உள்ள பெஞ்சை பார்த்ததும் புரிந்து கொண்டேன். அவ்வளவு மக்கள் கூட்டம்.

ஏதோ அந்த ஹோட்டலை பார்த்ததும் காபி குடிக்க வேணும் போல இருந்தது.

இப்போ ஹோட்டலுக்குள் நுழைந்தவாறு

ஐயா ஒரு காபி என்றேன்.

“காபியா இதோ தாரேன் தம்பி, வேறேதும் சாப்பிடுதீகளா, தண்ணீ வேணுமா” என கிராமத்து உபசரிப்போடு காபியை நீட்டினார் அந்த பெரியவர்.

“பெரியவரே ஒரு காபி பார்சல்” என ஒருவர் காபியை கேட்டுவிட “பாத்திரம் கொண்டுவரலீயா” என அந்த பெரியவர் கேட்க

“டீக்கவர்ல தாங்கையா” என அவர் சொல்ல

“அவரைப்பார்த்து நீ ஊருக்கு புதுசு போல இந்த ஊருல பிளாஸ்டிக்கவர உபயோகிக்க மாட்டோம்பா, அதுவும் டீ பார்சல், சாப்பாடு பார்சல் எல்லாம் முக்கியமா பிளாஸ்டிக் பாக்கெட் போட்டு தரவே மாட்டோம்” என அவர் சொன்னதும்.

“இப்படியும் ஒரு ஊரா” என வாய்பிளந்து காபியை குடித்த வண்ணம் அந்த பெரியவரையும் அந்த ஊரையும் மனதுக்குள் பாராட்டினேன் அந்த ஹோட்டலைவிட்டு நடையைக்கட்டினேன்.

மேற்கு நோக்கிய சிவாலயம் அங்கிருந்து 1.5கி.மீ. பதாகையை பார்த்தபடி நடக்கிறேன். 300 அடியிலிருந்து சாலையின் இருபக்கமும் பச்சைபசேல் வயற்காடுகள். நெற்கதிர்கள் அறுவடைக்கு கம்பீரமாய் தயாராகி இருந்தது.வாய்க்கால் நீர் ஓட அந்த இடமே அழகின் அரவணைப்பில்.

தரிசு நிலங்களே கொஞ்ச கி.மீ.களுக்கு இல்லை. மகிழ்ச்சியாய் இருந்தது. இது என் இளம் வயதில் எம் சொந்த ஊரின் மீனாட்சிபுரத்தின் நினைவுகளை கண் முன்னே கொண்டு காட்டியது. அப்படியானால் தற்போதைய மீனாட்சிபுரம் விளை நிலம் சூழ அல்ல விலைநிலங்கள் சூழ செயற்கையின் அரவணைப்பில்.

இப்போது ராஜா பிள்ளை பெரியவரின் கண்டிப்பும், இந்த இயற்கை சூழ் நடையும் எம்மனதில் ஏதோ இதமான மகிழ்ச்சியை ஏற்படுத்திவிட்டது.இருந்தாலும் நான் வசிக்கும் சொந்த ஊரைப்பார்த்து ஒருவித வருத்தமும் இருந்தது.

இறைவா ”எம்மூரிப்படி இல்லீய” என்ற வருத்தத்தை பதிவு செய்தபடி

“துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்” என்ற பதிகம் பாடியபடி ஐந்தெழுத்து நாமத்தை சொல்லியபடி சிவாலயத்தை நோக்கி என் கால்கள் நடைபோடத்தொடங்கியது.

20 நிமிடங்களில் கோவில் வந்தடைகிறேன். இயற்கை சூழ் பச்சைபசேல் வேறொரு உலகில் நடப்பதைப்போல உணர்ந்து கோவிலை வந்தடைகிறேன் கோவிலுக்குள் நுழைகிறேன்.

ஐந்தெழுத்து நாயகனை பார்த்து “இந்த உலகில் வாழும் எல்லோரும் நல்லாயிருக்கணும், நான், நீ, நாம், எனைச்சேர்ந்தோர், எனைச்சாராதோர், இப்படி ஒரு பட்டியல் சொல்லி உணர்வுடன் வணங்கி, இந்த இயற்கை சூழ் அமைப்பை எல்லா ஊரும் பெற அருள் புரிவாயாக” என்றபடி அம்மனையும் தரிசிக்க சென்றேன் நான். பிரகாரங்களை சுற்றி துணை தெய்வங்களை வழிபட்டு கோவிலில் கொஞ்ச நேரம் அமர்ந்தெழுந்தேன்.

இப்போது கோவிலை விட்டு வெளியே வந்தேன். வெயில் கொதித்தாலும் அருகில் உள்ள படித்துறையும், ஆலமரமும் பிள்ளையாரும் அங்கேயே எனை அமர வைத்தது சிறிது நேரம்.

துள்ளி விளையாடும் மீன்கள், படியிலிருந்து வேகமாய் ஆற்றில் குதித்து குளித்து விளையாடும் சிறுவர்கள், ஆற்றையும் சற்று உற்று நோக்கிய போது, இக்கரையில் தொடங்கி அக்கரை வரை பார்த்து இங்கேயே வாழ்ந்திடலாம் என்றே எனக்கு தோன்றிற்று.

படித்துறையிலிருந்து எழுகிறேன். திரும்பிப் பார்த்தால் ஒரு வயதான மனிதர். அவர் விவசாயி என்பது மட்டும் அவரை பார்த்தவுடனே என புரிந்தது.ஆனால் அவரை பார்த்ததும் கையெடுத்து கும்பிடவே தோன்றியது.

“என்ன தம்பி ஊரைப்பத்தியும் இயற்கையை பத்தியும் ரொம்ப அக்கறை படுகிற மாதிரி தெரியுது” என்றவர் வினவ

“ஆமாங்கையா நகர வாழ்க்கை நரக

வாழ்க்கையாய் ஆகிக்கொண்டே இருக்குதையா" என நான் சொன்னதும்,

"அதுக்கு இப்படி வேண்டினால் மட்டும் போதுமா" என அந்த விவசாயி கேட்டதும்,

"என்னைய்யா செய்யணும்", சொல்லுங்க என்றேன் நான்.

"தம்பி கடவுள்ட வேண்டுறது மட்டும் எல்லாம் நடந்திடாதுப்பா, நம்ம ஏதாவது முயற்சி செய்யணும். முயற்சியோடு வேண்டிப்பாரு" என ஒரு ஞானிச்சிரிப்பு சிரித்தார்.

நானும் அவர் சொல்ல வார்த்தைகளுடன் ஒரு நிமிடம் யோசித்தபடி கண்மூடி கண்திறக்கிறேன். அந்த விவசாயியை காணோம். அவர் நின்ற இடத்தில் இப்போது ஒரு பூமாலை மட்டுமே இருந்தது. பூமாலை உற்று நோக்கி அதை தொட முயற்சித்தேன். ஐந்தெழுத்து நாயகன் கம்பீரமாய் எம்முன்னே எழுந்து நிற்கிறார். எனக்கு தெரிந்த பதிகங்களை பாடி நமசிவாய் என வணங்கியதும் அவர் ஆசி வழங்கி 5 மஞ்சள் துணிப்பைகளை வழங்கினார்.

அதை நான் கையில் பெற்றதும் சிவபெருமான் மறைகிறார்.

போதி மரத்தில் ஞானம் பெற்ற புத்தனாய் நானில்லை எனினும் என் சிந்தையெல்லாம்,

# ஹைக்கூ - இரு கோண உத்தி

ஹைக்கூ பற்றிய புரிதலுக்குப் பிறகு ஹைக்கூவின் உத்திகளை முயற்சிக்கலாம். ஹைக்கூவில் கற்பனை கூடாது என்பர். உவமைகளை ஏற்காது. எனினும்படிமஉத்திகளைப்பயன்படுத்தலாம். அவைகள் இரு கோணங்களைத் தந்து சில இடங்களில் பல கோணங்களில் வந்து கவரும். எனினும் படிமத்திலிருந்து எதை விளக்க நீங்கள் முயற்சிக்கிறீர்களோ அது வார்த்தையில் வருதல் கூடாது. அது வாசகனின் தனித் திறமைக்கானது. எனில் ஹைக்கூ உத்தியில் நவீன கவி உத்தி என வைத்துக் கொள்ளலாம். நவீன கவியில் வேறொரு கோணத்தில் கவிஞர் உலாவ நீங்கள் வேறொரு கோணத்தில் அதை புரிய வைத்திட முடியும். ஹைக்கூவின் சிறந்த உத்தி இது.

இதனை இனி இருகோண உத்தி என அழைக்கலாம்.

உ-ம்

அந்தக் காட்டில்
எந்த மூங்கில்
புல்லாங்குழல்

அமுதபாரதி

உழுதுவந்த களைப்பில்
படுக்கும் மாடுகள்
காயம் தேடும் காக்கை

அறிவுமதி

சுற்றிலும் வேலி
தாண்டியபடி இருந்தது
காய்த்த தென்னை..!

யுவபாரதி, கந்தகப்பூக்கள்

தன்னை இழந்து உரமாகி
மீண்டும் துளிர்த்தது
உதிர்ந்த இலைகள்.

ஜெய ஜெயார்

மணம் வீசியழைத்து
மகரந்தம் பரிமாறியது
மலர்.

யுவபாரதி, கந்தகப்பூக்கள்

எதிர்பார்ப்பு ஏதுமின்றி
எரிதழல் ஏந்திவருகிறது
சிம்னி விளக்கு,,,!

நாகை ஆசைத் தம்பி

விவசாயி சொன்ன மொழியும், சிவன் கொடுத்த அருளும், மஞ்சள் பைகளும், ராஜாப்பிள்ளை ஹோட்டல் பெரியவர் மறுத்த நெகிழிகளும், ஊரை வளமாக்க நலமாக்க வேண்டுமென்ற எனது நோக்கமுமாகவே இருந்தது.

படித்துறை, சிவன் கோவில் கடந்து இரு பக்கமும் வரப்பும், வயலும் சூழ்ந்த அந்த பகுதியை விட்டு கடக்கிறேன். இப்போது அங்கே பார்த்தால் ராஜாபிள்ளை ஹோட்டலில்லை. எங்கே என விசாரித்தால் அவர் உறவினர் திருமணத்திற்கு வெளியூர் போய் ஒரு வாரத்திற்கு மேல் ஆகிறதாம். ஆனால் கடையின் முன்பு ஒரு வாசகத்தை மட்டும் அப்போது கண்டேன்.இங்கு பிளாஸ்டிக்கவர் உபயோகிப்பதில்லை என்ற வாசகமே அது.

இப்போது பேருந்திற்காக காத்திருக்கிறேன். நான் என் வீடு செல்வதற்குள் ஆழ்ந்து சிந்தித்து ஏதோ நாம் வசிக்கும் ஊருக்கும், இந்த உலகுக்கும் ஏதோ நல்லது செய்ய வேண்டுமென்பதே எனது நோக்கம். அப்போது என் கைகளில் மஞ்சள் துணிப்பைகள் எனைத்தழுவியது.

அப்போதே என் மனம் எனக்குள்ளே கேட்ட கேள்வி மட்காத நெகிழிப்பைகளால் யாதொரு பயனுமில்லையே..” நாம ஏன் துணிப்பைகளை தயாரிக்கக்கூடாது?” ஆனால் அதில் ஏதாவது வித்தியாசமா செய்யணும்முன்னு யோசித்தேன்.

வீட்டிற்கு வந்தவுடன் அதற்கான பணிகளை தொடங்கினேன்.

அப்போது தொடங்கிய என் பொறுப்பு இப்போதும், இந்த 76 வயதினிலும் சில நிமிடங்களுக்கு முன் வரை தொடர்ந்தது. திருக்குறள், ஆத்திச்சூடி, பாரதி வரிகள், வாழ்த்து வரிகள், இப்படி புதுமைகளை அச்சிட்டு துணிப்பைகளை தயாரித்து குறைந்த ரூபாய்க்கு இந்த சமூகத்திற்கு அளித்து வருவது என் முயற்சி தானே. இது தான் என்னோட ப்ளாஸ்பேக். இதுபோதும் நினைக்கிறேன்.

இப்போது அதே மீனாட்சிபுரம் பிள்ளையார் கோவில் தெரு வீட்டில் படுத்த படுக்கையில் நான். எனை நோக்கி மரணம் வந்துவிட்டது. இங்கே எதைவிட்டுச் செல்லப்போகிறேன் நான். இந்த துணிப்பைத்தாத்தாவான எனை சூழ்ந்து நிற்கிறார்கள் இயற்கை ஆர்வலர்கள் பலர்.

“இந்த ஊருக்கும் உலகிற்கும் இயற்கையான பெருவாழ்விற்காக இனி நான் என்ன செய்யப் போறேனோ” என கண்ணீர் வடித்து என் மரண வாக்குமூலத்தை ஒப்பிக்கத்தொடங்கினேன்.

“என் வீட்டில் உள்ள அனைத்து ரக துணிப்பைகளை இந்த ஊர் பொதுமக்களுக்காக கொடுத்திடுங்கள்.. நெகிழிகளும் நெகிழிப்பைகளும் பயன்படுத்தாமல், துணிப்பைகளை பயன்படுத்தச் சொல்லுங்கள்.. இந்த துணிப்பை தயாரிக்கும் இயந்திரத்தை படித்து வேலை வாய்ப்பற்று இருக்கும் இளைஞர்களுக்கு கொடுத்திடுங்கள்” என சூழ்ந்து நிற்கும் கூட்டத்திற்கு வாக்குமூலம் சொல்லிய வண்ணம் எம் கண் மூடியது.

எம்மனம் அங்கிருந்து மீண்டும் கல்லூருக்கு புறப்பட்டு செல்கிறது. அங்கு விவசாயி ரூபத்தில் காட்சி தந்த சிவனிடம் முக்தி அடைய விரைகிறது



**தன்முனைக் கவிதை**

படைக்கும் வரை
படைப்பாளியின் பந்தம்..
படைத்த பின்
படிப்பவர்க்கு சொந்தம்..

**சாரதா க. சந்தோஷ்**
ஐதராபாத்



உன்ற னுளத்தி லுயிராய்க் கருதியெனை
அன்பா யரவணைத்(து) ஆசையாய்த் தோள்சுமந்தாய்!
கன்ன மிரண்டில் கனிவுடன் முத்தமிட்டாய்!
புன்னகை யோடு பொறுத்தாயென் சேட்டைகளை!
பொன்றாத் துணைநீயே! பூவுலகி லென்றும்நான்
உன்னுள் கலந்த உறவு.

சியாமளா ராஜசேகர்



## தெய்வத்தின் கருவறை பூக்கள்

சரிபாதியை கணவனுக்கு கொடுத்துவிட்டு
தன்பாதியில் பெரும்பகுதி சிசுவுக்கென
கருவறையில் ஒதுக்கிக் காத்தவளே
என் ஆயுளையே வாடகையாய் தரினும்
சமனாகாது உன் தியாகத்திற்கும் சகிப்பிற்கும்
பெண்மைக்குள் தெய்வம் நிரந்தரமாய் உறைவதால்தான்
கருவறை என்றாரோ தாயே உன் வயிற்றை
தெய்வமே உனை என்றும் வணங்கும் பாக்கியம் தா.

*கவிச்சுடர் பாலக்கிருட்டிணன் வண்ணமுத்து*